பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 05 திங்கட்கிழமை (19-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:54

# புலிகளின் தீர்வு யோசனைகள் குறித்து ஜனாதிபதி தலைமையில் கூடி ஆராய்வு

## இந்திய அரசமைப்புச் சட்ட ஆலோசகரும் பங்கேற்பு

கொழும்பு,ஜனவரி 19

**வடக்கு - கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான விடுதலைப் புலிகளின் திட்டவரைவு குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உயர்மட்ட நிபுணர்களுடன் கூடி ஆராய்ந்திருக்கிறார். இந்திய உயர்நீதிமன்றத்தின் சிரேஷ்ட சட்டத்தரணியும் அரசமைப்புச் சட்ட ஆலோசகருமான கே.கே.வேணு கோபாலும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.**

ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்குள் விடுதலைப் புலிகளின் யோசனைகள் இணங்கிப் போகக்கூடிய வழிவகைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டிருக்கிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கும் இந்திய நிபுணரின் பங்குபற்றலுக்கும் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமர் ஏற்பாடு செய்திருக்கிறார்.

சட்டவல்லுநர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர் என்று ஜனாதிபதியின் ஆலோசகர் அலுவலக அறிக்கையொன்று தெரிவித்திருக்கிறது.

இலங்கையின் ஐக்கிய - பிரதேச

(16ஆம் பக்கம் பார்க்க)

## நடிகர் மணிவண்ணன் யாழ்ப்பாணம் வருகிறார்



யாழ்ப்பாணம்,ஜன.19

பிரபல தென்னிந்திய சினிமா தயாரிப்பாளரும் நடிகருமான மணிவண்ணன் எதிர்வரும் புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் காணப்படும் நிலைமைகளை நேரில் அறிந்து கொள்வதற்காகவும், துறைசார்ந்த கலைஞர்களோடு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் அவர் இங்கு வருகை தருகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரபல உல்லாச விடுதி நிறுவனமான ரில்கோ ஹொலிடேய்ஸ் பிறைவேற் லிமிட்டெட் (Tilko Holidays

(16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு தேவைகள் குறித்து கிளிநொச்சியில் இன்று முக்கிய கூட்டம்

### வெளிநாடுகளின் ராஜதந்திரிகள் பங்குபற்றுவர்

கிளிநொச்சி, ஜன.19

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு, புனரமைப்புத் தேவைகளை ஆராயும் முக்கிய கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெறும்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கொழும்பிலுள்ள தூதரகப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வர். இக்கூட்டத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமை வகிப்பார். புலிகளின் பொருளாதார மூலவள ஆலோசகர் ஜோய் மகேஸ்வரனும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்.

பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய யூனியன், உலக வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வர்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு நேரடியாக நிதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக புலிகளின் கிளிநொச்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, கிழக்குக்கான அபிவிருத்தித் திட்டம் ஒன்று சர்வதேச

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என சு.க. - ஜே.வி.பி. கூட்டுக்குப் புதிய பெயர்

### தலைவி ஜனாதிபதி; செயலாளர் ரில்வின் சில்வா

கொழும்பு,ஜன.19

சு.க. - ஜே.வி.பி. கூட்டு ஒப்பந்தம் வைபவ ரீதியாக நாளைக் காலை 10 மணிக்கு கைச்சாத்திடப்பட்டதும் கூட்டுக்குப் புதிய பெயர் சூட்டப்படும். கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இவ்வைபவத்தை பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சி சார்பில் அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும், ஜே.வி.பியின் சார்பில் அதன் செயலாளர் ரில்வின் சில்வாவும் இவ்வாறான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர்.

இவ்வைபவத்தில் ஜே.வி.பியின் முக்கிய உறுப்பினர்களும், சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்கள், தொகுதி அமைப்பாளர்கள், மாகாணசபைகளின் ஆளுநர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்குகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

சு.க. - ஜே.வி.பி. கூட்டுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்று பெயரிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த முன்னணி எதிர்வரும் தேர்தல்களில் தாமரைச் சின்னத்தில் போட்டியிடுமென தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னணியின் தலைவியாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமா

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா இரகசிய பதவிப்பிரமாண விவகாரம்:

# நாடாளுமன்றத்துக்குப் பிரேரணை கொண்டு வந்து புதிய ஜனாதிபதியை நியமிக்கச் செய்ய அரசு ஏற்பாடு

கொழும்பு,ஜன.19

1999ஆம் ஆண்டு டிசெம்பர் தேர்தலுக்குப் பின்னர் - 2000ஆம் ஆண்டு நவம்பரில் ஜனாதிபதி இரண்டாவது தடவையாகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட விவகாரம் அரசினால் நாடாளுமன்றத்தில் எழுப்பப்படவிருப்பதாகத் தெரிகிறது. அரசமைப்புச் சட்டப்படி, ஜனாதிபதி பதவியைத் தொடர்ந்து வகிக்க சந்திரிகா குமாரதுங்க இச் சத்தியப்பிரமாணத்தால் அருகதையற்றவர் என்று கூறும் ஐ.தே.முன்னணி அரசு, அதனால் ஜனாதிபதி பதவிக்கு ஒருவரை நியமிப்பதற்கான தெரிவை நாடாளுமன்றத்தில் நடத்துமாறு பிரேரணை ஒன்றின் மூலம் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவைக் கோரவிருக்கிறது.

1999ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் இரண்டாவது தடவையாக 2000ஆம் ஆண்டு நவம்பரில் தாம் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொலைக்காட்சிப் பேட்டியில் ஒப்புக்கொண்டதையடுத்தே அரசு இந்நடவடிக்கையில் இறங்கவிருக்கிறது என்று ஆங்கில பத்திரிகைச் செய்தியொன்று கூறுகின்றது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்விவகாரம் எழுப்பப்பட்டு ஆராயப்பட்டிருக்கிறது. வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க அதனை எழுப்பியுள்ளார். ஜனாதிபதி 1994, 1999, 2000 ஆகிய ஆண்டுகளில் மூன்று தடவைகள் பதவிப் பிரமாணம் செய்துள்ளார். இதன் மூலம் அரசமைப்புச் சட்ட ஷரத்தை ஜனாதிபதி மீறிவிட்டார் என்று அமைச்சர் கருணாநாயக்க அமைச்சரவையில் வாதிட்டிருக்கிறார்.

இதனால், ஜனாதிபதி பதவியை வகிக்க அவர் உரித்துடையவர் அல்லர் என்றும் அவர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

அவரது வாதத்தைத் தொடர்ந்து, அந்த விவகாரத்தை நாடாளுமன்றம் கொண்டுசெல்ல அமைச்சர் கருணாநாயக்கவுக்கு பிரதமர் அங்கீகாரம் வழங்கியிருக்கிறார்.

ஜனாதிபதியின் தற்போதைய பதவிக்காலத்தின் செல்லுபடித் தன்மை குறித்து கேள்வியெழுப்பும் நாடாளுமன்ற பிரேரணையைத் தயாரிக்க கட்சி சட்டத்தரணிகளுக்கும் பிரதமர் அனுமதி வழங்கியிருக்கிறார் எனவும் கூறப்படுகிறது.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 31(2), 32(1), ஆகிய ஷரத்துக்களின்படி ஒரு நபர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இரண்டு தடவைகள் மட்டுமே பதவி

(16ஆம் பக்கம் பார்க்க)

## இரு தரப்புகளின் அழுத்தங்களால்

# நாடாளுமன்றத் தேர்தல் குறித்து தீர்மானிக்க முடியாதவராக ஜனாதிபதி!

கொழும்பு,ஜன.19

பொதுத் தேர்தலை குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் நடத்த வேண்டாமென சர்வதேச சமூகம் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்துவரும் அதே வேளை, ஜே.வி.பியினரும், பொ.ஐ. முன்னணியின் முன்னாள் அமைச்சர்கள் சிலரும் உடனடியாக பொதுத் தேர்தலை நடத்தவேண்டுமென ஜனாதிபதியை நிர்ப்பந்தித்து வருகிறார்கள் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு தரப்பினரதும் அழுத்தம் காரணமாக ஜனாதிபதி ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள முடியாதவ

(16ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது
40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள், ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.


அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

— 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
— 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
— 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
— 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
— 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
— 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.



NSB தேசிய சேமிப்பு வங்கி



யாழ். ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கும் இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரத்தைப் படத்தில் காண்கிறீகள். (ஐ)

யாழ். போதனா வைத்தியசாலையில்

# இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம் இன்றுமுதல் இயங்கத் தொடங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ் நோயாளர்களின் நீண்ட காலத தேவையாக இருந்து வந்த " இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரம்" யாழ். ஆஸ்பத திரியின் சிறுநீரகச் சிகிச்சைப்பிரிவில் இன்று வைபவரீதியாக இயங்கவைக்கப் படவுள்ளது.

இந்நிகழ்வு ஆஸ்பத்திரியின் சிறுநீரகச் சிகிச்சைப பிரிவில் இன்று மாலை 4 மணிக்கு ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம் தலைமையில நடைபெறும் . இதில் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஆசியுரையை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி க.சிவபாலன், வைத்திய நிபுணர் த.பேரானந்தராசா, சத்திர சிகிச்சை நிபுணர் எஸ். ஜெயரட்ணம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி, கண்வைத்திய நிபுணர் க.குகதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.

நிறைவுரையை செஞ்சொற் செல்வா ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார்.

இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் இன்மையால் யாழ். நோயாளர்கள் எதிர்நோக்கி வந்த துன்பங்கள் குறித்து யாழ்.ஆஸ்பத்திரியின் சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவின் வைத்திய கலாநிதிகள், ஆஸ்பத்திரிப் பணிப்பாளா முதலியோர் பிரபல சமயச் சொற்பொழிவாளர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனிடம் எடுத்துக் கூறியதுடன், இந்த இயந்திரத்தை வெளிநாட்டில் இருந்து அன்பளிப்பாக பெற்றுத் தர வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

இதனையடுத்து , அண்மையில் லண்டன் சென்றிருந்த ஆறு.திருமுருகன் அங்கு தாம் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் போது அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிதியை இந்த இயந்திரத்தின் கொள்வனவுக்கு பயன்படுத்த எண்ணினார். அத்துடன் அங்கு வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்துக்களிடம் யாழ். ஆஸ்பத்திரியில் நவீன இரத்த சுத்திகரிப்பு இயந்திரத்தின் தேவை குறித்தும எடுத்துக் கூறியிருந்தார்.

இதன் பலனாக, ரூபா 17 லட்சம் பெறுமதியான இந்த இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் லண்டன் வாழ் இந்துக்களின் நிதியுதவியுடன் சுவீடன் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு லண்டனில் வசிக்கும் வே.சிவசுந்தரம் என்னும் சமூக சேவையாளரின் ஊடாக யாழ். அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதுவரை காலமும், குடா நாட்டில் பாம்புக்கடி மற்றும் விஷக் கடிக்கு இலக்காகி இரத்தம் சுத்திகரிக்கப்பட வேண்டியவர்களும், சிறுநீரக சுத்திகரிப்பு வசதியின்மையால் அவதிப்படுவோரும் இரத்த சுத்திகரிப்புக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தனர். மேற்படி இயந்திரம் யாழ். ஆஸ்பத்திரியில் இயங்கத் தொடங்கியதும் யாழ். நோயாளர்கள் இதுவரை காலமும் எதிர்நோக்கிய சிரமங்கள் நீங்கிவிடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ)

## கிழக்கு பொங்குதமிழுக்கு விரிவான ஏற்பாடுகள்

# மட்டு, அம்பாறை மாவட்டங்களில் அலங்காரங்கள்; மூன்று இடங்களிலிருந்து மக்கள் பேரணிகள்

மட்டக்களப்பு, ஜன.19

கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில நாளை மறுதினம் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வினை முன்னிட்டு மட்டக களப்பு, அம்பாறை மாவட்டங்கள் சிவப்பு, மஞ்சள் நிறக்கொடிகளால் அலங் கரிக்கப்பட்டுள்ளன, நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதிக்கும், பிரதம மந்திரிக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அன்றைய தினம் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தலைமையில் அம்பாறையிலிருந்து ஒரு பேரணியும், பட்டிருப்பில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஸ்ணபிள்ளை தலைமையில் பிறிதொரு பேரணியும், மட்டக்களப்பில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் மற்றொரு பேரணியும், சித்தாண்டியிலிருந்து இன்னொரு பேரணியும் பொங்கு தமிழ் மைதானத்தை வந்தடையவுள என.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவா அவைத் தலைவர் க. அருள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பொங்கு தமிழ் பிரகடனமும் இடம்பெறவுள்ளது.

விடுதலைப் போராட்டத்தையும், பயங்கரவாதப் போராட்டத்தையும் வேறுபடுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிப்பதுடன், விடுதலைப் புலிகளின் தடை நீக்கப்பட வேண்டும். அத்துடன் தமிழர்களுக்கெதிராக இலங்கை அரசுக்கு வழங்குகின்ற உதவிகளும் நிறுத்தப்பட வேண்டும்.

தடைப்பட்டுள்ள பேச்சுக்களை மேற்கொள்ள புற நிலைச் சூழல்களை ஏற்படுத்துவதுடன் போர் நிறுத்தப் பலாபலன்களை தென்னிலங்கையே அனுபவிக்கின்றது என்பதை வெளிப் படுததல்.

காணாமற் போனோர் தொடர்பான சர்வதேச மனிதநேய அமைப்புக்கள கவனத்திலெடுத்து காணாமல் போனோர் தொடர்பான விவரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே பொங்கு தமிழ் நிகழ்வுகள நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# இளைஞனைப் பொலீஸார் தாக்கியதாக முறைப்பாடு

யாழப்பாணம்,ஜன.19

விறகு வெட்டச் சென்ற இளைஞன் ஒருவரை பொலீஸார் தாக்கினர் எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டை, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பிரான்சிஸ் -ஜெசிந்தன (வயது - 19) என்ற இளைஞனே பொலீஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தர் எனத் தெரிவித்து அவரது பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் தனது வீட்டிற்கு அருகில் விறகு வெட்டச் சென்றபோது. அங்கு வந்த மூன்று பொலீஸாரில் ஒருவர் தன்னை தாக்கியதாக அந்த இளைஞன் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்கப்பட்ட இளைஞன் தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்றது.

(ஜ-7)

# கட்சிக் கொள்கையை மதித்து நடப்பதால் எனக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## தோல்வியிலேயே முடிவடையும் என்கிறார் ஆனந்தசங்கரி

அட்டாளைச்சேனை, ஜன.19

தமிழர் விடுதலைக் கூட்டணி கொள்கை அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அந்தக் கொள்கை அடிப்படையில் நான் செயற்பட்டதாலும், கொள்கையை இறுக்கிப்பிடித்ததாலுமே எனக்கெதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வர முயற்சிகள் நடைபெறுகின்றன. அப்பிரேரணை நிறைவேறாது. அது தோல்வியிலேயே முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கிழக்கிலங்கை சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தேசிய மாநாடு கடந்த சனிக்கிழமை பொத்துவில் பசறடிச்சேனை (உல்லை) அல் - இஷ்ராக் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு ஆனந்தசங்கரி உரையாற்றினார்.

ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இப்றான்சா பௌறுதீன் (கௌமி) தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் அவர் தொடர்ந்தும் உரையாற்றியதாவது:-

கூட்டணி இலட்சியத்தின் படியே நான் செயற்படுகிறேன். என்னில் எந்த குறையும் இல்லை. தமிழர், முஸ்லிம, சிங்கள மூவினங்களும் வேறு என்று சிந்திக்கவில்லை. சிலரது கைதட்டலுக்காக எனது கொள்கையை விட்டுக்கொடுக்கமாட்டேன்.

இங்கு அபிவிருத்தி பற்றி சிலர் உரையாற்றினர்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்பு எந்த அபிவிருத்தியும் செய்யப்படவில்லை. பொத்துவில் என்றாலும் சரி, யாழ்ப்பாணத்திலும் சரி பாடசாலைகளோ, வீதிகளோ அபிவிருத்தி செய்யப்படவில்லை.

கிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் பிட்டும் தேங்காய்ப் பூ போலும் வாழுகின்றனர். அவ்வாறு வாழாவிட்டால் யாரும் நிம்மதியாக வாழ முடியாது.

சில ஊடகவியலாளர்கள் அரசியல வாதிகளுடன் இருப்பார்கள், அரசியல் வாதிகள் ஊடகவியலாளர்களுடன் இருப்பார்கள். சில ஊடகவியலாளர்கள் தனக்குப் பிடிக்காத அரசியல் வாதிகளுக்கு எதிராக எழுதுவார்கள. விஞ்ஞான உலகத்தில் உண்மையை உள்ளபடி எழுதுவதில் எந்த தப்புமில்லை. ஆனால் எழுதும் ஊடகவியலாளர் தைரியமாகச் சொந்தப் பெயரில எழுத வேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார். (ஐ)




பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்ற சம்பந்தன் விருது இம்முறை மூதறிஞர் சு.வேலுப்பிள்ளைக்கு வழங்கப்பட்டுள்ளது. நேற்று தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் இடம்பெற்ற விழாவில் பேராசிரியர் அ. சண்முகதாஸிடமிருந்து சம்பந்தன் விருதை சு.வே.பெற்றுக் கொண்டார்.

(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## தேசிய மட்டத்தில் முதலாம் இடம்

யாழ்ப்பாணம்,ஜன.19

மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் கடந்த வருடம் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சமூகக் கல்விப போட்டியில் தரம் 8ஆம், 9ஆம் பிரிவில கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி டர்ஷினி கிருபானந்தன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான பரிசில்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டி மகாமாயா மகளிர் கல்லூரியில் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தலைமையில் நடைபெற்ற விழாவில் வைத்து வழங்கப் பட்டது.

(எ-4)




கணனி பற்றிய ஆரம்ப அறிவை பாடசாலை மாணவர்களுக்குத் தருகின்ற குறுவட்டு (சீடி) ஒன்றை மவுஸ் பிறைவேட் லிமிட்டெட்டும், நீம்சொலுஷன் பிறைவேட் லிமிட்டெட்டும் கூட்டாக உருவாக்கி உள்ளன.

'பூச்சியம்' எனப்படும் இந்த பல்லூடக குறுவட்டின் அறிமுக வைபவம் நேற்று யாழ்.பஸ்தியன் விடுதியில் நடைபெற்றது. அங்கு எடுக்கப்பட்ட படங்கள் இவை.

( படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்கள்).

# ஈராக்கில் அமெ. படைத் தலைமையகம் மீது துணிகரத் தற்கொலைத் தாக்குதல்!

பக்தாத்,ஜனவரி19

**ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தில் அமைந்துள்ள அமெரிக்கப்படைத் தலைமையகக் கட்டட வாயிலில் தற்கொலைப் போராளி ஒருவர் துணிகரத் தாக்குதல் நடத்தியுள்ளார். இரண்டு அமெரிக்கப் படையினர் உட்பட 22 பேர் இதில் கொல்லப்பட்டனர்; இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்களில் பலர் உயிருக்குப் போராடி வருகின்றனர் என்று பக்தாத் வைத்தியசாலை தெரிவித்துள்ளது.**

ஈராக்கிய நேரப்படி நேற்றுக்காலை 8 மணிக்கு இத்தாக்குதல் நடந்தது. முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் கைதுசெய்யப்பட்ட பின் இடம்பெற்ற மிகப்பெரிய தாக்குதல் இதுவாகும். அமெரிக்கப் படையினர் சம்பவ இடத்தை உடனடியாகச் சுற்றிவளைத்தனர். நேற்றுமாலை வரை மீட்புப் பணிகள் தொடர்ந்தன. குண்டுத்தாக்குதல் நடந்த இடம் தீப்பற்றி எரிந்ததை தொலைக் காட்சிகள் காண்பித்தன. அமெரிக்கப் படைத்தலைமையக வாயிலில் தற்கொலைப் போராளி ஒருவர் துணிகரத் தாக்குதல் நடத்தியுள்ளமை ஈராக்கில் அமெரிக்கப் படையினரின் பாதுகாப்பை மேலும் கேள்விக்குறியாக்கியுள்ளது என்று அங்குள்ள சிஎன்என் செய்தியாளர் மைக்கல் ஹோல்மெஸ் கூறியிருக்கிறார். இத்தாக்குதலில் இரண்டு படையினர் கொல்லப்பட்டதை அமெரிக்கப் படைப் பேச்சாளர் கிறிஸ்தோபர் உறுதிசெய்தார். ஈராக்கிய இடைக்கால நிர்வாகக் குழு உறுப்பினர் ஒருவரும் காயமடைந்தார் என்று கூறப்படுகிறது. ஆனால், அதனை அவர் உறுதிசெய்யவில்லை.

பக்தாத்திலுள்ள சதாம் ஹுசைனின் மாளிகையையும் அதற்கு அருகில் உள்ள ஏனைய கட்டடங்களையும் இணைத்தே, அமெரிக்கப் படையினர் தமது தலைமையகத்தை அங்கு அமைததுள்ளனர். இந்தக் கட்ட டத் தொகுதியைத் தகர்த்து, அங்குள்ள படையினரைக் கொலைசெய் வதே தற்கொலைப் போராளியின் நோக்கமாகும். ஆனால், படைத் தலை மையக வாயிலிலேயே தற்கொலைப் போராளி கார்க் குண்டை வெடிக்க வைத்துள்ளார்.

"வேகமாக வந்த வெள்ளை நிறக் கார் ஒன்று படைத் தலைமையகக் கதவுடன் மோதி வெடித்துச் சிதறியது" - என்று சம்பவத்தை நேரில் பார்த்த ஈராக்கியர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

"தற்கொலைப் போராளி கார்க் குண்டை வெடிக்கவைத்ததும், அப் பகுதியில் நின்ற மூன்று கார்களிலிருந்து அமெரிக்கப் படைத் தலைமையகத்தை நோக்கி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அமெரிக்கப் படையினரும் பதிலுக்கு சரமாரியான வேட்டுக்களைத் தீர்த்தனர்"

- என்று காயமடைந்த ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் ரோந்துசென்ற அமெரிக்கப் படையினரைக் குறிவைத்து இடம்பெற்ற தாக்குதலில், படையினரின் வாகனம் ஒன்று சின்னாபின்னமானது. அதிலிருந்த மூன்று படையினர் கொல்லப்பட்டனர்.

இது இவ்வாறிருக்க, அமெரிக்கப் படையினர் ஈராக்கை ஆக்கிரமித்த நாளிலிருந்து இதுவரை உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை ஐநூறைத் தாண்டிவிட்டது என்று பென்ரகன் அறிவித்துள்ளது.

இதற்கிடையே-

அமெரிக்கப் போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் பயிற்சியில் சதாமின் விசுவாசிகள் ஈடுபட்டு வருகின்றனர் என்று வளைகுடாப் பத்திரிகை ஒன்று தெரிவித்திருக்கிறது.

குறிப்பாக சிறியரக ஏவுகணைகளான 'ஷாம் - 7', 'எஸ்.ஏ.-7', ஸ்ரிங்கர் ஆகியவற்றைக் கையாள்வது குறித்தே இவர்கள் பயிற்சி பெறுகின்றனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



எரியும் வாகனங்களும் இறந்த ஒருவரின் சடலமும்.

தீயில் கருகிய பஸ்.

உலக அரங்கில்



இந்திய நாடாளுமன்றத் தேர்தல் குறித்து தி.மு.க. பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் காங்கிரஸ் தலைவி சோனியாவைச் சந்தித்துப் பேசினார்கள். இந்தப் பேச்சின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த தி.மு.க. முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பாலு, காங்கிரஸ் பிரமுகர் மன்மோகன் சிங், சோனியா காந்தி, மறைந்த முரசொலிமாறனின் மகன் தயாநிதிமாறன், மு.கருணாநிதியின் மகனும் தி.மு.க துணைப் பொதுச் செயலாளருமான மு.க.ஸ்டாலின் ஆகியோர்.

# அமெரிக்காவுக்குச் சவாலாக மனிதரை செவ்வாய்க்கு அனுப்புகிறது ரஷ்யா!

மொஸ்கோ,ஜன.19

அமெரிக்காவுக்கு சவால் விடுக்கும் வகையில், 2014ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதனை அனுப்பப்போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதன் அனுப்பப்படுவான் என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் கடந்தவாரம் அறிவித்திருந்தார். விண்வெளி ஆராய்ச்சி குறித்த ஆர்வத்தை இவரது அறிவிப்பு உயர்த்தியிருந்தது.

இந்நிலையில், அமெரிக்காவுக்கு சவால்விடும் வகையில் 2014ஆம் ஆண்டில் செவ்வாய்க்கு மனிதனை அனுப்பப்போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது. அதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக இறங்கியிருப்பதாக ரஷ்ய விண்வெளி ஆய்வு நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

செவ்வாய்க்கு மனிதனை அனுப்ப 150 பில்லியன் அமெரிக்க டொலர் தேவையென அமெரிக்கா அறிவித்துவிட்டது. ஆனால், ரஷ்யாவின் திட்டப்படி 15 பில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமே இதற்குப் போதுமானது.

இதற்கிடையே -

செவ்வாயில் தரையிறங்கி ஆய்வு நடத்தும் 'ஸ்பிரிட்' ஆய்வுக்கலம், மண் பரிசோதனையில் தற்போது ஈடுபட்டுள்ளது.

மண்ணைக் கிளறி ஆய்வுசெய்யும் இந்தக் கலம், மண்ணைப் பரிசோதனை செய்ய ஆரம்பித்த பின்னர் எடுக்கப்பட்ட படங்கள் இன்னமும் பூமிக்கு வந்து சேரவில்லை. அந்தப் படங்களுக்காக விஞ்ஞானிகள் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

ஆய்வுக்கலத்தின் மண் பரிசோதனை இன்று முடிவடைகிறது. அதன்பின் மண் ஆராய்ச்சிப் படங்கள் பூமிக்கு அனுப்பப்படலாம்.

இந்த ஆராய்ச்சி மூலம் செவ்வாயின் தரையில் கனியுப்புக்கள் உள்ளனவா? என்பது தெளிவாகும். சோதனையில் கனியுப்புகள் இருப்பது கண்டு பிடிக்கப்படின் செவ்வாயில் தண்ணீர் இருப்பது நூறு சதவீதம் உறுதிப்படுத்தப்படும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

ஜேர்மனியின் மெயின்ஸ என்ற இடத்திலுள்ள ஜோகன்னஸ் கூட்டன்பேர்க் பல்கலைக்கழகம் உருவாக்கிய மிக நுட்பமான 'ஸ்பெக்ட்ரோ மீற்றர்' என்ற கருவி இந்த ஆய்வுக் கலத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கருவி, கனியுப்புகள் குறித்து நுணுக்கமாக ஆராயும் என்று ஜேர்மனிய விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த ஆய்வுக்கலத்தின் செயற்பாடுகளை கலிபோர்னியாவிலுள்ள 'பசடெனா' விண்வெளி ஆய்வு நிலைய தரைக்கட்டுப்பாட்டு நிலைய விஞ்ஞானிகள் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

அதேநேரம் - நாஸா அனுப்பிய மற்றொரு ஆய்வுக்கலமான 'ஒப்பர்சூனிட்டி' எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாயில் தரையிறங்கவுள்ளது.





உலக சமூக அமைப்பின் ஆறுநாள்கள் மாநாடு இந்தியாவின் மும்பை நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. உலக மயமாக்குதலுக்கு எதிரானவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கிறார்கள். விவசாயப் பிரதிநிதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள், பெண்கள் அமைப்பினர் என பலநாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்கின்றனர். இம்மாநாட்டுக்கு ஆதரவு தெரிவித்தும் பணக்கார நாடுகளின் பாரபட்சமான வர்த்தக விதிகளைக் கண்டித்தும் மும்பை நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றின் போது எடுக்கப்பட்ட படம் இது.

# பனிப்பாறையில் விமானம் வீழ்ந்தது! அதில் பயணித்த பத்துப் பேரும் பலி!!

## கனடா எல்லை அருகே சம்பவம்

சிக்காக்கோ,ஜன.19

அமெரிக்கா - கனடா எல்லைப் பகுதியில் பறந்து கொண்டிருந்த சிறியரக பயணிகள் விமானம் ஒன்று பனிப்பாறைக்குள் வீழ்ந்தது. அதில் பயணித்த அனைவரும் இந்த அனர்த்தத்தில் உயிரிழந்திருப்பார்கள் என்று அஞ்சப்படுகிறது. எனினும், இதுவரை சடலங்கள் மீட்கப்படவில்லை.

பீலி தீவிலிருந்து ஜோர்ஜியாவுக்கு சென்று கொண்டிருந்த விமானமே விபத்துக்குள்ளானதாக அமெரிக்கக் கடற்படை தெரிவித்துள்ளது.

கனடா எல்லையிலுள்ள சன்டஸ்கை என்ற இடத்திலேயே இந்த அனர்த்தம் நடந்தது.

இங்குள்ள பனிப்பாறைகள் நிறைந்த ஏரிக்குள் வழ்ந்த இந்த விமானத்தை தேடும் பணியில் ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளன.

இப்பகுதியில் கடந்த ஒரு வாரமாகக் கடும் பனி கொட்டிவருகிறது. வெப்பநிலை மைனஸ் 30 டிகிரி செல்சியஸுக்குச் சென்றுவிட்டது. இதனால், வீழ்ந்த விமானத்தை தேடும் பணிகள் மந்தமடைந்து வருகின்றன.

இதுவரை, இந்த விமானத்தின் பாகங்களையோ அல்லது அதில் பயணித்தவர்களின் சடலங்களையோ மீட்க முடியவில்லை என்று மீட்புப் பணியாளர்கள் கைவிரித்துவிட்டனர்.

எனினும், தேடுதல் தொடர்ந்து நடைபெறுகிறது.

விமானத்தைத் தேடும் பணியில் அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளன.

## பின்லேடன் நலமாக உள்ளார் என்று தலிபான் அறிவிப்பு

டுபாய்,ஜன.19

அல்கெய்டா இயக்கத் தலைவரும், சர்வதேச தீவிர வாதியுமான ஒஸாமா பின்லேடன் ஆரோக்கியமாக இருக்கிறார். அவருக்கு உடல் நலக் குறைவு ஏதும் இல்லை என்று தலிபான் இயக்கம் அறிவித்துள்ளது. தலிபான் இயக்க இணைய தளத்தில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

பின்லேடனும், தலிபான் தலைவர் முல்லா உமர் ஆகியோர் இன்னும் பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லையில்தான் பதுங்கி இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி அமெரிக்கா வெளியிடும் தகவல் அனைத்தும் பொய்யானவை என்றும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

# COLLEGE OF INTERNATIONAL INFORMATION TECHNOLOGY

Sannathy Rd, Atchuvely.

**புதிய கணனிப் பிரிவுகள் ஆரம்பம்**

▲ **Diploma Courses**
1. MS Office XP
2. DTP
3. Hard ware

▲ **Certificate Courses**
1. MS Word XP
2. MS Excel XP
3. MS Access XP
4. CorelDraw
5. Page Maker

▲ **Children Programme (Stage I, II, III)**

▲ அலுவலர்களுக்கான பிரத்தியேக வகுப்பு (இரவு)
- பூரண தமிழ் விளக்கத்துடன்,
- மட்டுப்படுத்தப்படாத செய்முறை வகுப்புக்கள்
- செய்முறையில் ஒவ்வொருவருக்கும் தனியான கவனஞ்செலுத்தப்படும்.
- பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.
- எமது கல்லூரியின் 2nd Convercation April மாதத்தில் நடைபெறும்.

*சந்நிதி வீதி,*
*அச்சுவேலி.*
(27310)(34-11)
*Director,*
CIIT கணனிக்கல்லூரி.



## தேவை

எமது திரையரங்குக்கு பின் வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.
1. காசாளர்
2. கிளார்க்
3. ஒப்பரேற்றர்
4. ஒப்பரேற்றராகப் பழகவிரும்பு பவர்கள்.

தங்குமிட வசதி உண்டு.

எதிர்வரும் 21.01.2004 புதன்கிழமை காலை 9.00மணிக்கு நேரில் வரவும்.

**நிறைஞ்சனாஸ் திரையரங்கு**
206, பொன்னாலை வீதி,
சங்கானை.
(சி-32815)(36)



## தொடர்பு கொள்ளவும்

கனடாவில் இருந்து வந்திருக்கும் *பொன்னுத்துரை சசிக்குமார்* என்பவரை கனடாவில் இருந்து வந்திருக்கும் *மயில்வாகனம் ஜெயந்தி* என்பவர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றார். கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**ச.மயில்வாகனம்,**
18, அரசடி லேன்,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம். (27275) (23-11)


## கண்ணீர் அஞ்சலி



கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தினதும் விளையாட்டுக் கழகத்தினதும் ஸ்தாபகரும் யாழ்ப்பாண மாநகரசபை முன்னாள் பிரதி முதல்வருமாகிய

**பீ.எவ்.சேவியர்** அவர்கள்

இயற்கையெய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கிறீன் பீல்ட் சனசமூகநிலையமும்,*
*விளையாட்டுக்கழகமும்.*
- நிர்வாகிகள்
(27266)(23-16)

## துயர் பகிர்கின்றோம்



16-01-2004 வெள்ளிக்கிழமை
அன்று காலமான
**திருமதி லில்லிகிறேஸ் தேவசகாயம்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு
கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஐங்கரன் (USA)
திரு. திருமதி சந்திரராஜா - கிருபா,
திரு.திருமதி இளையதம்பி,
திரு. திருமதி லோகன் கிரிஷா
(டென்மார்க்).

*இல.482,*
*நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(27319) (23-16)

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபானு வருடம் தைத்திங்கள் 22 ஆம் நாள் (22.01.2004) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில்

விக்டர் அன்ன றெஜினா
தம்பதிகளின் செல்வப்புதல்வன்
திருநிறை செல்வன்
**அலெக்ஸ் பெனடிற்**
அவர்களுக்கும்

திருஞானம் தவமணி
தம்பதிகளின் கனிஷ்டபுதல்வி
திருநிறை செல்வி
**றெஜென்சியா ஞானவதனி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் திருமணஞ்செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்களது குடும்ப சகிதம் வருகைதந்து புதுமணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்துவதுடன் தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்:**

திருமதி விக்டர் அன்ன றெஜினா
டாக்டர் சுப்பிரமணியம் றோட்,
யஸ்தஸ் சின்னப்பு வீதி,
புதுவளவு, சுன்னாகம்.

திரு.தி.டார்வின் அவர்கள்
ஆசிரியர் இல்லம்,
உடுவில் மகளிர் கல்லூரி,
உடுவில்.

☞ இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
(27146)(34)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



செல்வி
**இராமலிங்கம் பரமேஸ்வரி**
(கல்வயல் சாவகச்சேரி)

தோற்றம்
07.12.1939

மறைவு
21.01.2001

அவனியில் பிறந்து
அன்னை மடிதனில் தவழ்ந்து
அன்பினை அள்ளி - எமக்கு
அருவியாய் சொரிந்து - எம்மை
உறவுகள் சொல்லி
உரிமையாய் அழைத்து
பரமேஸ்வரியென வாழ்ந்து
பரமன் பதம் தனைசேர்ந்து
இன்று ஆண்டுகள் மூன்று
- நிறைந்தனவே

*ஆண்டுகள் எத்தனை சென்றாலும் என்றும் தங்களை நினைவு கூருவதுடன் ஆத்மாசாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

தகவல்:
அண்ணன் மகன்:
**வேதாரணியம் பிரபாகரன் குடும்பம்.**

*சுவிஸ்.*
(27313)(34-11)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி லில்லிகிறேஸ் தேவசகாயம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் இல. 28,றக்காலேன், சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லில்லிகிறேஸ் தேவசகாயம் 16.01.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சவரிமுத்து தேவசகாயத்தின் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் செல்வரட்ணம் (முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர், பிரான்ஸ்), மேரி மக்ரலின் (பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் உத்தியோகத்தர், லண்டன்), மேரிலூட்ஸ் (பிரான்ஸ்), மேரிபொளின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், விற்பனைத்திணைக்களம்), நவரட்ணம் (பிரான்ஸ்), சாள்ஸ் அழகரட்ணம் (உக்கும் பிரான்ஸ்), மேரிஅஞ்சலா (லண்டன்), ஜோர்ஜ் ஜெயரட்ணம் (பிரான்ஸ்), எட்வின் குணரட்ணம் (கண்ணன் - லண்டன்), மேரி ஆன் சியாமளா (லண்டன்), யஸ்மின் சாந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் றீற்றா றோசலின், காலஞ்சென்ற குமரையா தேவராஜன் .(முன்னாள் உத்தியோகத்தர், விற்பனைத் திணைக்களம்), அருள்நாயகம் (பிரான்ஸ்), ஜெயந்திரா ராஜக்கோன் (மின் அத்தியட்சகர், மின்சாரசபை), கில்டா (பிரான்ஸ்), கிறிஸ்ரின் (பிரான்ஸ்), விமலநாயகம் (லண்டன்), ஆனந்தி (பிரான்ஸ்), நளாயினி (லண்டன்), ஜோர்ச் ஜேசுதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜோண்பிள்ளை இராசநாயகம் (ராசா), அந்தோனிப்பிள்ளை இராஜேஸ்வரி (ராணி), றீற்றா பரமேஸ்வரி, காலஞ்சென்ற பற்றிக இராசசுந்தரம், ஜோசப் ராஜசிங்கம் (சிங்கம்) ஆகியோரின் சிறிய தாயாரும் டிலானி, நோஜல், கவிதா, டீன், சசி, மறியா, மனுவலா, ஷெரி, எறிக், ஜெரோலின், ஜொனத்தன், ஜெனோசா, டெவினா, லொறன்ஷா, ரொமா, கிளாரா, மேனா, மொறின், ஜோண், டிலு, டேமியன், சிந்து, நோஜலின், ஷெலின், ஐஸ்வர்ஜா, நற்ரலின், நிக்கோல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஷன்டல், சஞ்சஸ், டெறி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.01.2004) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியினைத் தொடர்ந்து நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 28, றக்காலேன்,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்,*
***T.P.:222 3405***

தகவல்:
S.S.தேவசகாயம் (கணவர்)
(27320)

## சிவசம்பு சிவராசா

கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மாளிகாவத்தை சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சிவராசா நேற்று (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவசம்பு - அன்னமுத்து தம்பதிகளின் மகனும் மனோரஞ்சினியின் அன்புக் கணவரும் சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரனும் அமரர் கதிரேசு, தவமணி ஆகியோரின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரி, சிவனேஸ்வரி, வேலருட்செல்வன், தவக்குமார், இராசகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் முருகானந்தன், கிருபானந்தன், கஜமுகன், கஜரூபன ஆகியோரின் சிறியதந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாளிகாவத்தை*
*சங்கானை,*
(27321)

தகவல்:
மனைவி, பெறாமக்கள்.

## திருமதி இரத்தினபூபதி மகேந்திரன்

வல்வெட்டியைச் சேர்ந்த திருமதி இரத்தினபூபதி மகேந்திரன் நேற்று (2004.01.18) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.00மணியளவில் காலமானார்.

அன்னார் க.மகேந்திரன் (இலங்கை வங்கி, முன்னாள் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற கனகசிங்கம் (செல்லையா நீதிவான்) தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சோதிசுந்தரம் மற்றும் சிவபாக்கியம், திருமதி இராசபூபதி மகாதேவா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயந்தி-றோசா (கனடா), ஜெயக்குமார் (கனடா), ஜெயானந்தன் (கனடா), ஜெயேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நந்தி மளவன் (அருள்), சரோஜா, ஜெயந்தினி, பாரதி ஆகியோரின் அன்பு மாமியாரும் நிஷாந்தன், தனுஷா, ஹரிஷன், கோபீசன், நிருஷன், வீணா, சாமிகா ஆகியோரின் அருமைமிகு பேர்த்தியாரும் திருமதி சிவகாமசுந்தரி கைலாயநாதனின் மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*'கோணம் போவில்'*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.*
(27316) (16)

தகவல்:
க.மகேந்திரன்
(கணவர்)

உதயன்

## சர்வதேச சமூகம் நடிப்பா, நல்லெண்ணமா?

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயலகத்தில் இன்று நடைபெற இருக்கும் மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி சம்பந்தமான மாநாடு இது. அதனால் மட்டும் மாநாடு முக்கியத்துவம் பெறவில்லை.

இந்த மாநாட்டுக்கு வெளிநாடுகள் பலவற்றின் தூதுவர்களும் ராஜதந்திர உயர் அதிகாரிகளும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

உதவி வழங்கும் நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் நடத்தும் மாநாட்டில் வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்கு உதவ ஏற்கனவே ஒப்புக்கொண்ட நாடுகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் உதவ விரும்பும் நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வதுதான் மாநாட்டுக்கு மிகுந்த முக்கியத்துவத்தை அளிக்கிறது.

மாநாட்டுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமை தாங்குகிறார்.

விடுதலைப் புலிகள் சமீபத்தில் புதிதாகத் தொடங்கியுள்ள திட்டமிடல், அபிவிருத்திச் செயலகத்தின் பணிப்பாளர் ஜோய்.மகேஸ்வரன் வடக்கு - கிழக்கின் இன்றைய உடனடி அவசரத் தேவைகளையும் திட்டமிட்ட அடிப்படையில் படிப்படியாகச் செய்ய வேண்டிய பணிகளையும் வெளிநாடுகளின் தூதுவர்கள், ராஜதந்திரிகள், உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு மாநாட்டில் எடுத்துக்கூறுவார்.

வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணம், அபிவிருத்தி மக்களின் மீள்குடியமர்வு ஆகியவற்றிற்கு நிதி உதவியோடு தொழில்நுட்ப உதவியும் கோருவார்.

இருபது வருடக் கடும்போரினால் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ள வடக்கு - கிழக்கை வெளிநாடுகளின் உதவியின்றி கட்டியெழுப்புவது முடியாத காரியம். சொந்த வீடு வாசல்களையும் காணி பூமிகளையும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினர் ஆக்கிரமிக்க வேறுவழியின்றி இடம்பெயர்ந்து அகதிவாழ்வு வாழ்ந்து அல்லலுறும் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமரச்செய்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் வெளிநாடுகளின் பெருந்தொகை நிதி உதவி தேவை.

இவற்றிற்கெல்லாம் உதவி வழங்குவதற்குப் பல உலக நாடுகள் டோக்கியோ மாநாட்டில் உறுதி அளித்தன. ஆயினும், இதுவரை உதவி கிடைக்கவில்லை.

நோர்வே அனுசரணையுடன் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே உலக நாடுகளில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் ஆறு சுற்றுடன் முடங்கிப்போயிருக்கின்றன.

நடந்த பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டபடி அபிவிருத்திப் பணிகளோ, இயல்புநிலையை ஏற்படுத்துவது போன்ற பிறசெயல்களோ குறிப்பிடத்தக்க அளவில் இதுவரை நடைபெறவில்லை.

அரசாங்கத்துடன் சேர்ந்து கூட்டாகப் பணிகளை மேற்கொள்வதற்குக் காலதாமதம் ஏற்படுவதால் மக்களின் கஷ்டங்கள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. இதைப் பார்த்துப் பொறுக்கமுடியாமலும் தொடரவிடக் கூடாது என்றும்தான் விடுதலைப் புலிகள் தாம் தனியாக வேனும் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு வசதியாக வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் கேட்டார்கள்.

அரசாங்கம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகத் திட்டங்கள் குறைபாடுகள் உடையவையாக இருந்த காரணத்தால் விடுதலைப் புலிகள் பிறநாடுகளின் நடைமுறைகளை நேரில்சென்று பார்த்தும், கேட்டு அறிந்தும் இலங்கை மற்றும் சர்வதேச சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்றும் நுணுக்கமாக அலசி ஆராய்ந்து வடக்கு - கிழகிற்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை நிறுவும் திட்டம் ஒன்றை அரசிடம் சமர்ப்பித்தார்கள்.

அந்தத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்வதற்குள் தென்னிலங்கையிலேயே அரசியல் சிக்கல் ஏற்பட்டுவிட்டது. சமாதானப் பேச்சுக்களை நடத்தி வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மூன்று அமைச்சர்களின் பொறுப்பில் இருந்த மூன்று முக்கிய அமைச்சுகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திடீரென்று பறித்துக்கொண்டார். அதனால், பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையே அதிகார இழுபறி ஆரம்பித்து உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

சமாதானப் பேச்சுக்களை அதிகாரமின்றி முன்னெடுக்கமுடியாது என்று பிரதமர் கைகழுவிவிட்டார். அனுசரணை வழங்கி வந்த நோர்வேயும் அரசியல் இழுபறி தீரும்வரை பொறுத்திருக்கப்போவதாகக் கூறிவிட்டது. சமாதானப் பேச்சுக்குப் பதில் இனிப் பொதுத் தேர்தல்தான் நடக்கும் சூழ்நிலை தோன்றியிருக்கிறது.

இந்த நிலையில்தான் வடக்கு - கிழக்கு அபிவிருத்தியை இனியும் தாமதிக்கமுடியாது என்ற நிலையில் விடுதலைப் புலிகள் ஆரம்ப நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார்கள்.

உதவி வழங்கும் நாடுகளுக்கு வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் உண்மையான அக்கறை இருக்குமானால் அதை அவை செயலில் காட்டுவதற்குப் புலிகள் இன்று நடத்தும் மாநாடு வாய்ப்பு அளிக்கிறது.

இப்போதைக்கு நடக்கமுடியாத சமாதானப் பேச்சுக்களை நடத்துங்கள் என்று சொல்லிக்கொண்டே இருப்பதை நிறுத்திவிட்டு உருப்படியாக உதவி செய்து சர்வதேச சமூகம் தனது நல்லெண்ணத்தைக் காட்டுமா? தவறினால் அவையும் நடிப்பதாகவே கொள்ளப்படும்.

# மாணவர் அனுமதியின் போது அன்பளிப்பாக நிதி பெறாதீர்!

### வலிகாமம் கல்விப்பணிப்பாளர் அதிபர்களுக்கு அறிவுரை

வலிகாமம்தெற்கு,ஜன.19

வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், மாணவர்களுடைய பாடசாலை அனுமதியின் போதோ, விடுகைப் பத்திரங்கள் வழங்கும் போதோ அன்பளிப்பாக அல்லது நன்கொடையாக பெற்றோர்களிடமிருந்து எந்த நிதியையும் அறவிடக்கூடாது.

- இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன்.

தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானைக் கோட்டங்களை சேர்ந்த கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் இதனைத் தெரிவித்தார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கல்விப்பணிப்பாளர் வலியுறுத்திக்கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ முதலாம் வகுப்பு அனுமதியின் போது ஒரு வகுப்புப்பிரிவில் 30 மாணவர்களுக்குக் கூடுதலாக அனுமதிக்கக்கூடாது. இரண்டு பிரிவுகள் வைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பாடசாலைகள் தவிர, ஏனைய பாடசாலைகளில் 30 மாணவர்களுக்கு மேல் இணைய வரும்போது, மேலதிக மாணவர்களை அருகில் உள்ள மற்றொரு பாடசாலையில் சேர்த்துக்கொள்ள அறிவுறுத்தவேண்டும். இதனால், சகல பாடசாலைகளுக்கும் மாணவர் பங்கிடப்பட்டு சீரான கல்வியை வழங்கமுடியும்.

★ மாணவர்களின் கற்றல் தொடர்பான மதிப்பீடுகள் ஒன்றரை மாதத்துக்குகொருமுறை எம்மால் மேற்கொள்ளப்படும். ஆசிரியர்கள் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

★ பொதுவாக, நிதி தொடர்பான விடயங்களுக்கு உபஅதிபரையே பொறுப்பாக நியமிக்கவேண்டும். பாடசாலை குணநல உள்ளீடுகள் தொடர்பில் நிதிக்குழு, எண்பார்வைக்குழுக்களை நியமித்து உள்ளீடுகள் உரியமுறைப்படி தேவையான அளவில பெறப்பட்டுள்ளதா என்பதை எழுத்துமூலமான ஆவணங்களில் பதிந்து வைத்திருக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் இருந்து இவை தொடர்பாக திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

★ சகல கடிதத்தொடர்புகளும், ஆசிரியர், பாடசாலை தொடர்பான பிரச்சினைகளும் கோட்டக்கல்வி அதிகாரிகளூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ இவ்வருடம் சகல பாடசாலைகளிலும் தமிழ்தினம் கொண்டாடப்படவேண்டும். வெறுமனே தமிழ்த்தினப் போட்டிகளை மட்டும் நடத்திவிட்டு தமிழ்த்தின கொண்டாட்டங்களை நடத்தாமல் விட முடியாது.

★ அதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர் போன்றோர் உள்ளக மேற்பார்வையை சிறப்பாக மேற்கொண்டு கற்றல் - கற்பித்தலை உயிரோட்டமுள்ளதாக்கவேண்டும்.

★ சிறுவர் நூலகங்களை ஏற்படுத்தி மாணவர்களின் சுயவாசிப்புக்கு ஊக்கமளிக்கவேண்டும் - என்று கூறினார் வலயக் கல்விப் பணிப்பாளர். (எ-152)

# ஒழுக்கத்தை வலியுறுத்தவென விரைவில் விசேட கல்வித் திட்டம்

### பாடசாலைக் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.19

பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கத்துடன் பண்புரீதியான - பழக்கவழக்கங்கள் கூறும் - ஒழுக்கத்தை வலியுறுத்தும் கல்வித் திட்டமொன்றை மேற்கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்வி அமைச்சின் கேட்போர்கூடத்தில் அண்மையில் நடைபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தின் போது பாடசாலைக் கல்வி அமைச்சர் சுர நிமல ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளில் ஒழுக்கத்தை மையமாகக் கொண்டு பண்புரீதியான கல்வித்திட்டம் பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக பெருந்தொகை நிதியைச் செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பண்புரீதியான கல்வித்திட்டத்தை முன்னெடுக்கும்போது தேசிய சமாதான நட்புறவு அமைப்பு கழகங்களை ஏற்படுத்தி அவற்றினூடாக பண்புரீதியான பழக்கவழக்கங்களை வளர்க்கவும திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகளில் சிறுவர் நட்புறவுக் கழகங்களை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவச பாடநூல்கள் ஆறாம் வகுப்புக்குரிய பாடநூல்கள் உட்பட அனைத்தும் வழங்கப்படும் - என்று கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-152)

# உயர் அழுத்த மின்சாரத்தால் மின் உபகரணங்கள் பாதிப்பு!

### கொடிகாமம், மிருசுவில் பகுதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.19

கொடிகாமம், மிருசுவில் பகுதிகளில் உள்ள வீடுகளின் மின் இணைப்பில் திடீரென மின்சார அழுத்தம் அதிகரித்தது. இதனால், வீடுகளில் பாவனையில் இருந்த மின்சார, இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் மின்குமிழ்கள் போன்றவை சேதமடைந்தன.

நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணிமுதல் தொடர்ந்து சில மணிநேரம் இப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு உயர் அழுத்த மின்சாரம் விநியோகிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனாலேயே உயர்மின் அழுத்தத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியாத மின்சார உபகரணங்கள் பழுதடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமத்தில் உள்ள மின்பிறப்பாக்கி மூலம் இந்தப் பகுதிகளுக்கு 24 மணிநேர மின்விநியோகம் சிலமாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

# பெண்கள் சிறுவர் நலன்பேணல் குறித்த விளக்கக் கூட்டங்கள்

### பொலீஸார் நடத்துகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜன.19

சிறுவர், சிறுமியர் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் முகமாக யாழ்.மாவட்ட மகளிர் சிறுவர் நலன்காக்கும் பிரிவுப் பொலீஸார் விளக்கக்கூட்டங்களை நடத்தி வருகின்றனர். மகளிர் பாடசாலைகள், சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் போன்றவற்றில் பொலீஸ் உயர் அதிகாரிகள் இந்த விளக்கக்கூட்டங்களை நடத்திவருகின்றனர்.

பெண்கள், சிறுவர், சிறுமியர் மீதான துன்புறுத்தல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், பாதிக்கப்பட்ட பெண்கள, சிறுவருக்கான சட்ட ஆலோசனைகள், வீதிப் போக்குவரத்து நடைமுறைகள் போன்ற விடயங்கள் குறித்து இந்தக் கூட்டங்களில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தொடரில், கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரியில் விளக்கக்கூட்டம் நடத்தப்பட்டது.

இதில் யாழ்.மாவட்டப் பெண்கள், சிறுவர் நலன்காக்கும் பொலீஸ் பிரிவின் பொறுப்பதிகாரி நாளிக டி.சில்வா இதில் விளக்கவுரை நிகழ்த்தினார். இவரது உரை தமிழில் மொழிபெயர்ககப்பட்டது.

பருத்தித்துறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிமல் மேற்படி பாடசாலை அதிபர் ஏ.கனகரட்ணம் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.(ஒ)

### நாளை

தை 06
செவ்வாய்க்கிழமை
(20.01.2004)
திதி: திரயோதசி
காலை 07.16 வரை.
நட்சத்திரம்: மூலம்
முற்பகல் 10.38 வரை
சுபநேரம்: 11.05-12.35
ராகுகாலம்: 3.35-5.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அதிக அதிகாரத்தை விரும்புபவர்கள் சுதந்திரத்தை இழக்க நேரிடும்.

# கலாசார மண்டபப் பெயர்ப்பலகை திறப்புவிழாவுக்கு முதல்நாள் சேதம்!

தெல்லிப்பழை,ஜன.19

அளவெட்டியில் புனரமைக்கப்பட்ட சுப்பிரமுனிய சுவாமிகள் ஞாபகார்த்த மண்டபத்தின் பெயர்ப்பலகை திறப்பு விழாவிற்கு முதல்நாள் விஷமிகளால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

யுத்த அனர்த்தங்களால் கலாசாரப்பேரவை மண்டபம் கடுமையாகச் சேதமடைந்திருந்தது. தற்போது பொதுமக்களால், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் இந்த மண்டபம் புனரமைக்கப்பட்டது, மேற்படி மண்டபத்திற்கு அளவெட்டியைச்சேர்ந்த சுப்பிரமுனி சுவாமிகளின் பெயர் சூட்டப்பட்டது. இந்த மண்டபம் கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இம்மண்டபத்திலேயே வலி. வடக்கு கலாசார விழாவும் கொண்டாடப்பட்டது.

இதேவேளை, மண்டபத்தின் திறப்பு விழாவுக்கு முதல் நாள் இரவு கலாசார மண்டப வளாகத்திற்குள் நுழைந்த விஷமிகள் மண்டபத்திற்கான மின்விநியோகக்கம்பியை துண்டித்தனர். அத்துடன் திரைநீக்கம் செய்யப்படவிருந்த புதியபெயர்ப்பலகையை அடித்து நொறுக்கி, அங்கிருந்த கிணறொன்றிற்குள், எறிந்துவிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கலாசார விழா ஏற்பாட்டாளர்களையும், பொது மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்தச்சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் அளவெட்டி அரசியல்துறைப்பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்படாமலேயே மேற்படி மண்டபத் திறப்புவிழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-150)

# வெளிநாட்டு மோசடிக் கும்பலை பிடிக்க விசேட பொலீஸ் குழு

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ். நகரப் பகுதியில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் என்று கூறப்படும் வெளிநாட்டவர்களைக் கைது செய்ய விசேட பொலீஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். பொலீஸ் நிலையக் குற்றவியல் பிரிவுப் பொலீஸ் பொறுப்பதிகாரி எச்.எம்.விக்கிரமரட்ண இதனைத் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக யாழ்நகரப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிறுவனங்கள், சேவை அலுவலகம் போன்றவற்றில் விநோதமான முறையில் பணத்தை வெளிநாட்டவர் சிலர் அபகரிப்பதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. இதனையடுத்தே யாழ்.பொலீஸாரால் விசேட பொலீஸ்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பணமோசடியில் ஈடுபடுபவர்கள் துருக்கி மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த மோசடிக் கும்பலில் 6 பேர் உள்ளனர் என்றும் -

இவர்களில் இரு ஆண்களும், இரு பெண்களும் இரு சிறுபிள்ளைகளும் அடங்கியுள்ளனர் என்றும் -

பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-7)

## கூரை அமைப்பில் புதிய அலை

# அன்டன் சுபர் ஷெல்டா

குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை




**அன்டன் சுபர் ஷெல்டா**

- 2.5 மி.மி. கனம் கொண்டது
- வேறு எந்தக் கூரைத் தகடுகளையும்விட மலிவானது
- குறைந்த வெப்பம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்.
- துரு பிடிக்காதது
- சுகாதார இடையூறு அற்றது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது

* நீடித்த பாவனைக்குப் பொருந்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள்.
* இதனை விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ள மறவாதீர்கள்.

Access Graphics

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
**சென்ற் அந்தனீஸ் ரூவ்பிங் (பிறைவேட்) லிமிட்டெட்**
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 2324261-5, 2337283-5 ஃபெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

எமது பயிற்சியகம்
**19 ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.**

# கலாலயா

பயிற்சியகம்
(பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)
**யாழ்ப்பாணம**

## மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

※ 3 மாத கால கேக் ஐஸிங், உணவுகள் தயாரித்தல், பூவேலை, கைவேலை, Fabric Painting, கூந்தல் அலங்காரம் பயிற்சிகள். இத்துடன் இக்காலப்பகுதியில் பிரபல அழகுக்கலை நிபுணர் ஒருவரால் 3 நாள்களுக்கு Facial அழகுக்கலை, முக அழகு சிகிச்சை, தலைமுடி அலங்கரிப்பு, மணப்பெண் அலங்காரம் என்பன மிகக்குறைந்த கட்டணத்தில் பயிற்றுவிக்கப்படும்.

※ 6 மாத கால உடை தயாரித்தல் பயிற்சி

**சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம்: 25-01-2004 (ஞாயிறு)**
**கிழமை நாள் பயிற்சிகள் ஆரம்பம்: 26-01-2004 (திங்கள்)**

▲ பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

☛ மேலும் விவரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப.2.30 மணிவரை அறிந்துகொள்ளலாம்.

(C/32825)(34-14-16) இயக்குநர்

---


அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்

செல்வம் செழிக்கக்கூடிய வளமான விளைச்சலுக்கு
இலங்கையில் முன்னணியில் திகழும்

# எட்க்ரோ

## கிரீவ்ஸ்

## MK 12/MK 25



**விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்**

புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு, எட்க்ரோ நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கி வரக்கூடிய சலுகைகள்.
ஒரு வருடத்துக்கான உத்தரவாத சான்றிதழ்.
பலமிக்கதும் நீண்ட காலம் உழைக்கக்கூடியது.
அதிக தண்ணீரை பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை.
சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர் இறைக்க வல்லது.
எரிபொருளை சேமிக்க வல்லது.
நாடளாவிய விற்பனைக்கு பிந்திய சிறந்தசேவை. தேவையானளவு உதிரிப்பாகங்கள்.

**எட்னா அப்ளயன்ஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**
160, பௌத்தாலோக மாவத்தை கொழும்பு-04.
தொலைபேசி: 508961-2, 502291-3, 592135-6 தொலைநகல்: 594558, 500909.
தொடர்புகளுக்கு: மயூரா 0777 - 418821 கிழனு 0777 - 418817

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:
**ஆர்க் என்ரபிறைசர்ஸ்**
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2052.

(27244)
(34-14-16)

---

## பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன அறிவித்தல்

**மேற்படி கூட்டுத்தாபனத்தின் சகல ஊழியர்களையும் எதிர்வரும் (22-01-2004) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாணத்தில் வழமையாகச் சந்திக்கும் இடத்தில் வந்து சந்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

*இரசாயனக் கூட்டுத்தாபனம்,*
*கொம்பனி லிமிட்டெட்,*
*பரந்தன்.*

திரு. கா.சிவபாதசுந்தரம்
தொழில் முகாமையாளர்
(சி32795) (23-14-16)

---

# பணியாளர்கள் தேவை

**இரும்பு விற்பனை நிலையத்தில் கடமையாற்றிய அனுபவமுடையவர்கள் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.**

- சிட்டை இலிகிதர்
- விற்பனையாளர்கள்

**விண்ணப்பங்களை கல்வி, அனுபவச்சான்றிதழ்களுடன் பின்வரும் முகவரிக்கு 30-01-2004 இற்கு முன்னதாக அனுப்பவும். அனுபவத்திற்கும் கல்விக்கும் ஏற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும்.**

**விளம்பர இல:- 2145**
C/o உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி27298) (23-14-16)

---

## மக்கள் நலன்காக்கும் பிரிவு

இருபாலைச் சந்தி

## அறிவித்தல்

எதிர்வரும் 31.01.2004 சனிக்கிழமை எமது சங்கமண்டபத்தில் பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும், யாப்பு அங்கீகரிப்பும் இடம் பெறவுள்ளன. அதற்கு முன்பதாகத் தங்களது அங்கத்துவத்தினைப் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புகள், தையல், முன்பள்ளி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. புதிய மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**முடிவு திகதி: 23.02.2004**

(27306) (26-14-16) - தலைவர்.

---

## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியாலும் அதன் பழைய மாணவர் சங்கத்தினராலும் அங்கீகரிக்கப்பட்ட கழகம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் மட்டுமேதான் என்பதனையும் -

ஒரு சிலரால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட யாழ்ப்பாண சென்றல் விளையாட்டுக் கழகத்துடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கோ அல்லது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்துக்கோ எதுவித தொடர்பும் இல்லை என்பதனையும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

| N. இராஜதேவன் | K. இராஜதுரை | V.T. சிவலிங்கம் |
|---|---|---|
| செயலாளர் | அதிபர் | தலைவர் |
| ப. மாணவர் சங்கம் | யாழ். மத்திய கல்லூரி | ப. மாணவர் சங்கம் |

(27267)(31-14-16)

---

## நினைவு கூருகின்றோம்

## இருபதாவது வருட நினைவு நாள்

தோற்றம் 06 - 01 - 1963



மறைவு 19 - 01 - 1984

## கிறிஸ்ததாஸ் நேசராஜன்

*நேசனே! எமதினிய நேசப்பழமே!*
*நீ மறைந்து இருபது வருடங்களானதோ!*
*நம்பமுடியவில்லையே எம்மால் கொடிய நோய்*
*உன்னை ஆட்டிப்படைத்தபோதும், சிறிதும் கலங்காமல்*
*கல்வி கற்று பரீட்சைகளில் வெற்றியடைந்தாய் பல்கலைக்கழகம்*
*செல்லும் வாய்ப்பைப் பெற்றும் செல்லமுடியாமல்*
*காலனுன்னைக் காளைப் பருவத்தில் கவர்ந்து விட்டானே!*
*அத்துயரம் இன்னும் மாறவில்லை என்செய்வோம்?*
*உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*"தங்கமால்",*
*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.*

**J.S. கிறிஸ்ததாஸ்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்
**குடும்பத்தினர்**

(27289) (26-14-16)

# 'இந்தியா எமக்கு என்றும் நட்பு சக்திதான்....!'

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்




**அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமிழர் பகுதியில் போர் நின்றதைத் தவிர வேறு ஏதாவது முன்னேற்றங்கள் இருக்கின்றனவா என்பது பற்றிய அலசல் இந்தப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.**

**இதுவரை செவ்வி வழங்கியவர்களின் கருத்துக்களின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதன்படியான மக்களின் இயல்புவாழ்க்கை தமிழர் தாயகப்பகுதியில் ஏற்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தல் சொலலப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைபடுத்தப் படவில்லை என்பது செவ்விகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.**

**அந்தவகையில், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனின் செவ்வி இன்று வெளிவருகின்றது.**

★ கேள்வி: புரிந்துணர்வு உடன்படிக்கையால் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

■ பதில்: புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வநதபின் சில விடயங்கள் நடந்துள்ளன. அதை மறுக்கமுடியாது.

வடக்குக்கு ஏ-9பாதை திறக்கப்பட்டுள்ளது. அதேபோல் கிழக்கிலும் பல பாதைகள் திறக்கப்பட்டுள்ளன. இராணுவம் சில பாடசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளது. ஆனால், முற்றுமுழுதாக இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை. அத்துடன், முக்கிய விடயத்துக்கு இன்னும் தீர்வு கிடைக்கவில்லை.

பாதுகாப்பு வலயம், மீள்குடியமர்வு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படவில்லை. பாதுகாப்பு வலயங்களுக்குள் ஆக்கிரமிப்பு இராணுவம் இன்றும் உள்ளது. பெரும்பாலான நிலங்களைத் தமது கட்டுப்பாட்டில் இன்னமும் இராணுவம் வைத்திருக்கின்றது.

உடன்பாடு கைச்சாத்திடமுன்புள்ள நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மக்கள் ஓரளவு சுவாசிக்கக் கூடியநிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

பேச்சுக்கள் நடந்துள்ளன. அதன் விளைவாக விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைவைக் கொடுத்துள்ளார்கள். இது ஒரு முக்கிய விடயமாகும். அத்துடன், கடந்த காலங்களுடன் நோக்கும்போது 2003 - யுத்தமற்ற ஆண்டாக இருந்துள்ளது.

இந்த உடன்பாடு எட்டப்பட்ட பின் பல சாதக, பாதக நிலைகள் காணப்பட்டபோதும், தீர்வை நோக்கிய பாதையில் பல படிகள் நாம் முன்னேறியிருக்கின்றோம் என்று கூறமுடியும்.

★ கேள்வி: அதி உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐ.நா. அதிகாரிகள் வருவதாகச் செய்திகள் வெளிவருகின்றன. இந்த அதிகாரிகளின் வருகையுடன் இப்பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என நம்புகிறீர்களா?

■ பதில்: நிச்சயமாக இல்லை. அதி உயர் பாதுகாப்பு வலயம் என்பது இராணுவம் தமிழ்மக்களின் வாழ்விடங்களை, தொழில் செய்யக்கூடிய வயல்களை தம்வசம் வைத்திருப்பதுடன் தொடர்புபட்ட விடயமாகும். இந்த மக்கள் சட்டபூர்வமாக தமது சொந்த இடத்துக்குப் போவதற்கான முழு அடிப்படைத் தகுதிகளும் அவர்களுக்கு இருக்கின்றன; அடிப்படை உரிமைகளும் அவர்களுக்கு உண்டு. இதை ஸ்ரீலங்கா அரசு மறுதலித்துக் கொண்டிருக்கின்றது.

இது தொடர்பாக தமிழ்க்கூட்டமைப்பு பல்வேறு ராஜதந்திரிகளுடன் பேசியுள்ளது. இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் தூதர்களுடன் பல தடவைகள் பேசியுள்ளோம்.

பேச்சுக்குத் தடையாக உள்ள விடயம் இந்த உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறியுள்ளோம். மீண்டும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் போதும், அங்கு முன்னுரிமையாக வரப்போவது இந்த உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைதான். பேச்சுக்கள் ஒழுங்காக - சீராக - செல்லவேண்டுமானால் மக்கள் மீளக்குடியமரக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும் என்று கோரியுள்ளோம். அரசுக்கு இந்த விடயத்தில் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் கோாரி வருகின்றோம்.

ஹம்பாந்தோட்டையிலோ காலியிலோ ஒரு சிங்களக் குடிமகனின் நிலப்பரப்பை படையினர் ஆக்கிரமித்துவைக்க இந்த இராணுவத்தால் முடியுமா இதை அனுமதிக்க ஸ்ரீலங்கா அரசால் முடியுமா பிரதமர் அல்லது ஜனாதிபதி இதை ஒத்துக்கொள்வார்களா என்று சர்வதேச பிரதிநிதிகளிடம் கேள்வி எழுப்பினோம்.

அமெரிக்காவில் அல்லது இந்தியாவில் இராணுவம் இப்படி நிலத்தை ஆக்கிரமித்து வைக்க நீங்கள் அனுமதிப்பீர்களா என்று அந்த நாடுகளின் தூதர்களிடம் கேட்டோம்.

இங்கு அகதியின் வீட்டில் இராணுவம் குடியிருக்கின்றது. அந்த வீட்டின் உரிமையாளர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே சிறுகுடிசையில் வாழ்கிறார். அங்கிருந்து தனது வீட்டை அவர் ஏக்கத்துடன் பார்க்கும் நிலையே காணப்படுகின்றது. இந்த நிலையை சர்வதேச சமூகம் அனுமதிக்கப்போகின்றதா என்று அவர்களிடம் நாம் கேட்டோம்.

மக்களை மீளக்குடியமர அனுமதித்தால், அவர்கள் பேச்சுக்கு உந்து சக்தியாக இருப்பார்கள். அப்படி அனுமதிக்காவிட்டால் பேச்சுக்கு எதிராகக் கூட அவர்கள் திரும்பலாம்.

### மக்களின் கேள்வி

உடன்பாடு நடைமுறைக்கு வந்து இரு வருடங்கள் ஆகும் போது கூட அந்த மக்கள் தமது வீட்டுக்குப் போகமுடியாதென்றால், புரிந்துணர்வு உடன்படிக்கை ஏன் என்று அந்த மக்கள் கேட்பார்கள். புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணாகப் போகும் நிலை கூட ஏற்படலாம்.

இந்த விவகாரம் குறித்து இராணுவத்துடன் பேசுவதால் பயனில்லை. பிரதமரும் ஜனாதிபதியும் இந்த விவகாரத்தில் மனமாற்றம் அடையவேண்டும்.

பாதுகாப்பு வலயம் என்பது தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகவல்ல. சிங்கள இராணுவம் தன்னைப் பாதுகாக்கவே பாதுகாப்பு வலயத்தை அமைத்துள்ளது. உலகில் மக்களைப் பாதுகாக்கத்தான் பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்படுகின்றன. இங்கு நிலைமை வேறாக உள்ளது.

இந்த விவகாரத்தில் இராணுவம் பாதுகாப்பு என்ற சிந்தனையில்தான் பார்க்கும். ஆகவே, அரசியல் மூலம் இந்த விவகாரத்துக்கு முடிவு எட்டப்படவேண்டும்.

ஆகவே, ஐ.நா. அதிகாரி பார்த்தால் என்ன, அமெரிக்க, இந்திய அதிகாரிகள் பார்த்தால் என்ன பயன் கிடைக்கப்போவதில்லை.

மீண்டும் ஒரு யுத்தம் வந்தால் என்ற சிந்தனையில் ஜனாதிபதியும் பிரதமரும் படையினரும் இருக்கின்றனர். ஆனால், எம்மைப் பொறுத்தமட்டில் மீண்டும் ஒரு யுத்தம் வராமல் இருப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்றே நாம் சிந்திக்கின்றோம்.

★ கேள்வி: வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் குறித்து...?

■ பதில்: தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக இந்திய அரசு இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஊடாக ஒரு தீர்வைக் கொண்டுவந்தது. அந்தத் தீர்வு என்பது ஒற்றையாட்சி அரசுக்குள் - ஒற்றையாட்சி முறைமைக்குள் - அதிகாரங்களைப் பகிர்தல் தொடர்பானது. அது ஒற்றை ஆட்சி முறைக்குள் அதிகாரப் பகிர்வு அல்ல. அதிகாரப்பரவலாக்கம் செய்யப்பட்டது.

அதிகாரப் பரவலாக்கலுக்கும் அதிகாரப் பகிர்வுக்கும் வித்தியாசம் தெரியாமல் பலருக்கு குழப்பம் நிலவுகின்றது. ஒன்றையாட்சி முறையின் கீழ் மத்திய அரசில் உள்ள அதிகாரங்களை அதிகாரப் பரவலாக்கல் ஊடாக மாகாணங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கமுடியும். மத்தியில் குவிந்திருப்பதை பரவலாக்கம் செய்வது, மத்தி அப்போது விரும்புகின்றதோ அந்த அதிகாரத்தை மீளப்பெறமுடிவும். அதைத்தான் அதிகாரப் பரவலாக்கம் என்று கூறுகின்றார்கள்.

அதிகாரப் பகிர்வு என்பது மத்தியில் உள்ளதை அன்பளிப்பாகக் கொடுப்பதைப் போன்று. மாவட்டத்துக்கோ மாகாணத்துக்கோ வழங்கப்படும் அந்த அதிகாரத்தை மீளப்பெற்றுக் கொள்ளமுடியாது.

சமஷ்டி அரசமைப்பு முறையின் கீழ்தான் அப்படியான அதிகாரப் பகிர்வு சாத்தியமாகும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்கம்தான் வழங்கப்பட்டது. எந்தச் சந்தர்ப்பத்திலும் அதிகாரங்களை மத்தி பறித்து எடுக்கும்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பில் இன்று வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் சமஷ்டி அரசமைப்பு உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டவை. அதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண அவை முன்வைக்கப்பட்டுள்ளன.

இறுதித் தீர்வுக்கான பேச்சுக்கு முதல் கட்டமான ஆலோசனைகளாக விடுதலைப் புலிகளின் வரைவு அமைந்துள்ளதையும் நாம் பார்க்கவேண்டும். இடைக்காலத்தில் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாகவும், இறுதிக்கட்டப் பேச்சுக்கான அடித்தளமாகவும் இந்த வரைவு அமைந்துள்ளது.

இந்த வரைவு குறித்து பலவிதமான விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றில் இந்தியாவின் முன்னாள் செயலாளர்களின் கருத்துக்கள் கவனிக்கத்தக்கன. தாம் கொடுத்த வரைவு குறித்துப் பேச்சு நடத்தத் தயார் என விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர் என்பதை இந்தியத் தரப்பு கவனிக்க வேண்டும். வரைவு குறித்துப் பேச்சு ஆரம்பிக்காத நிலையில் இந்தியத் தரப்பினர் அது குறித்து பாரதூரமான கருத்துக்களை வெளி யிடுவது ஆரோக்கியமானதல்ல.

விடுதலைப் புலிகளின் வரைவு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய மாற்றமாக கௌரவமான தீர்வுக்கு வழிகோலும் வகையில் - அமைந்துள்ளது. வரைவு கூடுதல் அதிகாரம் கொண்டது என்று அதை நிராகரிக்கமுடியாது. பேச்சு மூலம் ஆராயவேண்டும்.

★ கேள்வி: விடுதலைப் புலிகள் இந்தியாவுக்கு நேசக்கரம் நீட்டியுள்ளனர். நீங்கள் இந்தியாவுடன் நல்லுறவைப் பேணி வநதவர் என்ற வகையில் இந்தியா விடுதலைப் புலிகளின் நேசக் கரத்தைப் பற்றும் என நம்புகிறீர்களா?

■ பதில் : இலங்கை விடயத்தில் இந்தியா அக்கறை கொண்ட நாடு, அக்கறை கொள்ளவேண்டிய தேவையும் உள்ளது. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை நேரு காலம் முதல் பார்க்கவேண்டும். இந்தியா தான் விடுதலை பெறுவதற்கு சுதந்திர போராட்டத்தை நடத்தியுள்ளது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிய நாடு. ஆபிரிக்க, பலஸ்தீன விடுதலைக்காக ஐ.நா. சபையில் குரல் கொடுத்த ஒரு நாடு, ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்காக ஐ.நா. சபையில் பேசிய நாடு. இன்றும் சொல்லப்போனால் எங்களுக்குப் பக்கத்தில் உள்ள அண்டை நாடு. ஆனால், 110 கோடி மக்களைக் கொண்ட ஒரு பாரிய நாடு. நவீன தொழில்நுட்பத்தில் வளர்ந்த நாடு.

அவர்களைப் பொறுத்தவரையில் தங்களுடைய நாட்டின் பாதுகாப்பு, பொருளாதார நலன்கள், எதிர்காலம் ஆகியவற்றில் நிச்சயம் கவனமாக இருப்பார்கள்.

விடுத்லைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்றுவரை தனிநாட்டுக்கு ஆதரவு என்று ஒரு வார்த்தையை இந்திராகாந்தி முதல் எவரும் கூறவில்லை. தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு. அது நியாயமாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதையே ஆரம்பத்தில் இருந்து கூறிவந்துள்ளனர்.

ஆனால், இப்போது அண்மைக் காலத்தில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அமெரிக்கா ஜப்பான் ஆகிய நாடுகளின் ஈடுபாடுதான் இதற்குக் காரணம் என நான் கருதுகிறேன். நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மட்டுமே காரணம் அல்ல. அதற்கு மேலாக அமெரிக்கா ஒரு வல்லரசு. ஜப்பான் ஒரு பொருளாதார வல்லரசு. இவர்களின் ஈடுபாடு அதிஉச்ச நிலைக்குப் போகின்றபோது பிராந்திய வல்லரசான இந்தியாவின் நலன்கள் அதிகமானவை. பொருளாதார நலன்களும், பக்கத்து நாடு என்ற வகையில் பாதுகாப்பு நலன்களும் இந்தியாவுக்கு உண்டு.

மற்றும் ஒருபக்கம் நோக்கினால், உள்நாட்டுப்பிரச்சினையையும் இந்தியா எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஒரு காலத்தில் தி.மு.க. அரசை இலங்கைப் பிரச்சினை கவிழ்ந்தது. இலங்கைப் பிரச்சினை முக்கியமாக இந்திய அரசியல் மாற்றத்துக்கே உதவுகின்றது. இலங்கைப் பிரச்சினை பற்றிப்பேசுவது இந்தியாவுக்கு கடினமான செயல். இந்திய நீதிமன்றம் விடுதலைப் புலிகளுடன் பேசுவதைத் தடைசெய்துள்ளது.

இவற்றுக்கு மேலாக இந்திய அரசு எமது பிரச்சினையில் தலையிடுவது என்பது மிகவும் கடினமானசெயல். வல்லரசுகளின ஊடுருவலை இந்தியா விரும்பாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவற்றைநோக்கும் போது இந்தியாவின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பது உண்மை.

விடுதலைப் புலிகளும் தமிழ்க் கூட்டமைப்பினரும் கூட்டாகப்

**செவ்வி கண்டவர்: குகா**

பேசி இது தொடர்பாக முடிவு எடுக்கவேண்டும். பக்கத்தில் உள்ள வல்லரசுடன் பேசவேண்டியுள்ளதால் கவனமாகக் கையாள வேண்டும். இந்தியாவை நாம் பகைத்துக் கொள்வது எமக்கு பிரயோசனமாக இருக்கப்போவதில்லை.

எனவே, நாம் வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் இந்தியாவை பகைத்துக்கொள்ளளாமல், நண்பனாக மாற்றவேண்டும். இதற்கு இந்தியாவுடன் தொடர்ச்சியாகப் பேசவேண்டும்.

★ கேள்வி:- ஒருகாலத்தில் தமிழ் அமைப்புக்களுக்கு உதவியது போன்று இன்று சந்திரிகாவுக்கும் வேறுசில கட்சிகளுக்கு இந்தியா உதவி வழங்குவது குறித்து...?

■ பதில்:- அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் பனிப்போர் நடந்தவேளையில், திருமலைத் துறைமுகத்தை அமெரிக்கா பெறலாம் என்று இருந்தநிலையில், ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு பாடம் புகட்ட முனைந்த வேளையில் இவற்றைத்தடுத்து நிறுத்த தமிழ்மக்களுக்கு உதவி வழங்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட கசப்பான சில அனுபவங்கள் காரணமாக இலங்கை விடயத்தில் தலையிடாத போக்கை இந்தியா கடந்த 10 வருடமாக கைக்கொண்டது. இப்போது நிலை மாறிவருகின்றது.

### இந்தியப்படை மீண்டும் வருமா?

★ கேள்வி:- இந்திய அமைதிப்படை மீண்டும் இலங்கைக்கு வரும்சாத்தியம் உள்ளதா?

■ பதில்:- மீண்டும் ஒரு யுத்தம் இங்கு வரும் என்ற நம்பிக்கை எமக்குஇல்லை, இந்தியாவைப் பொறுத்தவரையில் மீண்டும் ஒரு யுத்தத்தின் மூலம் இந்தப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பமாட்டாது. அப்படியான சிந்தனை இந்திய அரசு மட்டத்தில் இருப்பதாக நான் கருதவில்லை. பேச்சு மூலம் தீர்க்க வேண்டும் என்றுதான் இந்தியா விரும்புகிறது.

★ கேள்வி:- சந்திரிக்காவுக்கும் ரணிலுக்கும் இடையிலான நெருக்கடிக்குத் தீர்வு ஏற்படாவிட்டால் மீண்டும் யுத்தம் ஏற்படும் சாத்தியம் உள்ளதா?

■ பதில்:- சந்திரிகா இன்றும் மிகவும் இறுக்கமான நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறது. ரணில் பேச்சு நடத்தத் தயார் என்று கூறுகிறார். அதற்கு பாதுகாப்பு வேண்டுமென அவர் கூறுகிறார். அதில் நியாயம் உள்ளது.

இருவரும் ஒற்றுமையாக வராமல் - பேச்சை நடத்தாமல். இதை இழுத்துக்கொண்டு போவார்களேயானால் ஆரோக்கியமான நிலை ஏற்படாது. விரக்தி, வெறுப்பு ஏற்படவே வாய்ப்பு உண்டு, விரக்தி ஏற்பட்டால் கெரில்லா அமைப்பு என்ன செய்யும்? பேச்சும் இல்லாமல் யுத்தமும் இல்லாமல் பேய்க்காட்டும் நிலை தொடருமாயின் தள அணியினரைக் கட்டுப்படுத்த முடியுமா? அவர்களுக்கு என்ன பதில் சொல்வது? தர்க்க ரீதியான முடிவு எங்கு போய்ச்சேரும் என்றால், யுத்தத்திற்கு நகரலாம்.

அந்த சூழலுக்கு விடக்கூடாது என்றால் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். பேச்சு ஆரம்பிப்பது ஜனாதிபதியினதும் பிரதமரினதும் கைகளிலேயே உள்ளது

தமிழ் மக்களைப் பகடைக்காய்களாக வைத்து தங்களது அரசியலை நடத்தும் சூழலை அனுமதிக்கவும் முடியாது. ஜனாதிபதி முறையை ஒழித்து நாடாளுமன்ற முறையின் ஊடாக சந்திரிகா தான் பிரதமராக வரவேண்டும் என்று சிந்திக்கிறார். சந்திரிகா கதிரையை விட்டு இறங்க, தான் எப்படி அந்தக் கதிரையில் ஏறி ஜனாதிபதியாக வரலாம் என்று ரணில் சிந்திக்கின்றார்.

எமது பிரச்சினையை வைத்துக்கொண்டு தங்களது பிரச்சினைக்கு இருவரும் பேரம் பேசுகிறார்கள்.

இது தொடர்கதையாக நீடிக்குமாயின், இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுச் சக்திகள் இதைப் புரிந்துகொள்ளவேண்

(10ஆம் பக்கம் பார்க்க)



**ஹம்பாந்தோட்டையிலோ காலியிலோ சிங்களக் குடிமகன் ஒருவரின் நிலப்பரப்பை படையினர் ஆக்கிரமித்து வைக்க இந்த இராணுவத்தால் முடியுமா? இதை பிரதமரோ, ஜனாதிபதியோ அனுமதிப்பார்களா?.**

**மக்களை மீளக்குடியமர அனுமதித்தால் அவர்கள் பேச்சுக்கு உந்து சக்தியாக இருப்பர். இல்லாவிட்டால் பேச்சுக்கு எதிராகத் திரும்பலாம். புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் நன்மையில்லை என்றால், அந்த உடன்படிக்கை ஏன் என்று மக்கள் கேட்கும் நிலை உருவாகும். மீண்டும் ஒரு யுத்தம் வந்தால் என்ற சிந்தனையில் ஜனாதிபதியும் , பிரதமரும், படையினரும் உள்ளனர். மீண்டும் ஒரு யுத்தம் வராமல் இருக்க என்ன செய்யவேண்டும் என தமிழ் மக்கள் சிந்திக்கிறார்கள்.**

**முதல் முதலாக விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள வரைவு தொடர்பாக இந்தியத் தரப்பு பாரதூரமான கருத்துக்களை வெளியிடுவது ஆரோக்கியமானதல்ல.**

**கடந்த ஓரிரு மாதங்களாக இலங்கை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரசன்னம் இதற்குக் காரணமாக இருக்கலாம். விடுதலைப் புலிகளும், தமிழ்க் கூட்டமைப்பும் இணைந்து இந்தியாவை நண்பனாக மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

## SUBRA (14)
சித்தன்கேணி

அரச பாடசாலைகளில் இடைநிலைத் தரங்களில் பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்பித்தலுக்கான பட்டதாரிகளைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கான போட்டிப் பரீட்சைக்குரிய வகுப்புக்கள்

**By: BRITTO**

ஆரம்பம்: 21-01-2004 மாலை 6.00 மணி
Wen. - Fri. மாலை 6.00 - 8.00மணி

(சி-32760) அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை. (21-11-16)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07 - 04 - 1938 | 20 - 12 - 2003 |



### அமரர் கதிர்காமத்தம்பி பரிபாலினா

மனிதருள் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்தீர்!
புனிதராய் வாழ்ந்து ஆண்டவனடி சேர்ந்தீர்!
ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19.01.2004) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நிகழ்கின்ற நண்பகல் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு உடன் எமது இல்லம் நாடிவந்து ஆறுதல்கூறிய அன்புள்ளங்களுக்கும் தந்தி, தபால், தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் சகலவழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*"பெரியவளவு".*
*அல்வாய் வடமேற்கு. அல்வாய் திக்கம்.* - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 - 01 - 1923 | 30 - 01 - 2003 |



### அமரர் சிவகுரு ஆனந்தராசா
(இளைப்பாறிய ஆசிரியர்)

ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறாது எமது துயர்,
ஈண்டு உங்களை நினைந்தே இப்பூவுலகில் வாழ்கிறோம்!
ஆத்மா சாந்திபெற வண்ணை ஸ்ரீ காமாஷித் தாயை வேண்டுகின்றோம்.

11, அரசடி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (27239)(34-11-16) குடும்பத்தினர்.

## அறிவித்தல்

### பின்னுறுதித் தீர்வை
### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

பாலேந்திரன் பெண் கலாவதி
465/24, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தற்போது உடுவில் வீதி,
மணநீக்கம்-212 மானிப்பாய் - மனுதார்

எதிராக

இராசையா பாலேந்திரன்
சிமெந்து தொழிற்சாலை அருகில்
காங்கேசன்துறை.
தற்போதைய விலாசம் தெரியாது. - எதிர்மனுதார்

மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் அவர்கள் முன்னிலையில் 2003 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி வழக்காளியும், வழக்காளியின் பதிவு பெற்ற சட்டத்தரணி திரு.இ.வசந்தசேனன் அவர்களும் சமுகமாயிருக்க எதிராளியின் தற்போதைய விலாசம் தெரியாதபடியால் 08.12.2003 அன்று எதிராளிக்கான அழைப்புக்கட்டளை உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டும் எதிராளி சமுகமாய் இல்லாத காரணத்தால் இவ்வழக்கு ஒருமுக விளக்கத்துக்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியம் பதியப்பட்டு வழக்காளியின் பிராது, ஆவணம் சாட்சியம் ஆகியவற்றை மன்று நன்கு மறுபரிசீலித்து வழக்காளியை எதிராளி வன்மமாகப் பிரிந்து வாழ்வதால் எதிராளியை வன்ம உறவறுப்பு என்று குற்றத்துக்கு குற்றவாளியாக கண்டு வழக்காளிக்கும் எதிராளிக்குமிடையே 1981 ஆம் ஆண்டு தை மாதம் 17 ஆம்திகதி நடந்த திருமணத்தை இரத்துச்செய்து பின் முற்றாகும் தீர்வை வழங்கப்படுகிறது. மேலும் பின்முற்றாகும தீர்வையின் வழக்காளி தனது கன்னிப்பெயரைப் பாவிக்கவும் திருமணமாகாத பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்கும் உரித்துடையவர் எனவும் தீர்ப்பு வழங்க இப்பின் முற்றாக்கும் தீர்வையின் பிரதி உதயன் பத்திரிகையில் பிரசுரித்து பிரசுரித்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆட்சேபம் எதுவும் எதிராளியால் தாக்கலசெய்ய தவறும் பட்சத்தில் இப்பின் முற்றாகும் தீர்வை முற்றானதாக்கப்படும்.

2003 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி.

வரைவு. இ.வசந்தசேனன் (ஒப்பம்)
வழக்காளியின் சட்டத்தரணி.

ஒப்பம்: ச.இளங்கோவன்
மாவட்ட நீதிபதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ம.செல்வரத்தினம்
பதிவாளர், மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்.
மல்லாகம்.

(27295)(34-11-16)


## வெளிவந்துவிட்டது!

கல்வியியல் ஆய்வாளரும், எழுத்தாளருமான
பா.தனபாலனின் (B.A.Cey., PGDE (merit)), M.Phil.in.Education),
உபபீடாதிபதி, கல்வியும் தர மேம்பாடும் - யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

### கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள்




M.Ed., B.Ed., Dip.in.Ed., ஆசிரிய பயிலுநர்கள், ஆசிரியர், அதிபர், கல்வியியலாளர்களுக்கு உகந்த நூல்.

அச்சிட்டோர்:- கற்பக விநாயகர் அச்சகம்,
295/7, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இலங்கை முழுவதற்குமான ஏகவிநியோகஸ்தர்கள்:

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-2222573.

(27296)(34-11-16)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
### இராமநாதன் தங்கராணி
திதி: திரயோதசி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.08.1946 | 30.01.2003 |

ஆண்டு ஒன்றல்ல எத்தனை வருடங்கள் கழிந்தாலும்
மூண்டதுயர் மாறுமோ? மனம் முழுமையாகுமோ?
ஈண்டு உம்மைப் போல் எமக்கொருவர் வருவாரோ?
வேண்டியமைகின்றோம் விண்ணுலகில் நீ சாந்தி பெற
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் 'அம்மா' என அழைக்க
எமக்கு உறவு ஒன்றுமில்லையே!
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் அழியாதம்மா உன் நினைவு!
அழுது தவிக்கும் எமக்கு ஆறுதல் கூற வாராயோ?
அன்பையும் பண்பையும் ஊற்றுத் தந்துவிட்டு இப்போது
எமைவிட்டுச் சென்று மீளாத்துயில் கொள்பவரே!
நான் இருக்கப் பயமேன்! என்றாய் அம்மா! அம்மா!!
ஊரார் பசி போக்கி நின்ற அன்பு அன்னையே!
எனது பிள்ளையின் பசி போய்விட்டது என்றீர் அம்மா!
பார்க்கும் இடமெல்லாம் பாசமுகம் தெரியுதம்மா!
ஆர்க்குமே தீங்கெண்ணாத அன்புருவே! எம் தாயே!
நாள் முழுதும் நடமாடிய எம் தெய்வமே!
எந்நாளும் எம்மோடு வாழ்வீரென்றே எண்ணினோம் அம்மா!
கொடிய நோய் வந்ததுவோ அம்மா! அந்தக் காலன்
கொண்டு போகிறேன் என்று ஒரு சொல் கூறினானோ தாயே!
நாம் படும் வேதனை உங்களுக்குத் தெரியவில்லையா தாயே!
அம்மாவை இழந்து அநாதைகளாய் ஆனோம் அன்னையே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல
விநாயகப் பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!*

இன்று (19.01.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஓராண்டு நினைவு அஞ்சலி நிகழ்வுகளிலும் கலந்துகொள்வதோடு நண்பகல் மதியபோசனத்திலும் பங்குகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளையார் கோயில் முன்,
உடுவில் தெற்கு, மானிப்பாய். (27018)(34-11-16)

அன்புக் கணவர். மக்கள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

# அதிபர், ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம்

கொழும்பு, ஜன.18

இலங்கை ஆசிரியர்சேவை, அதிபர் சேவைகளைச் சேர்ந்த அரச அலுவலர்களுக்கான புதிய சம்பள அளவுத் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

சுற்றறிக்கை, பி.ஏ, 15/2003 இனி பிரகாரம் அமுலுக்கு வரவுள்ள புதிய சம்பளத்திட்டம் 1.1.2004 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது.இதன் லிபரம் வருமாறு:-

சம்பள வகுதி T-16-1
இலங்கை ஆசிரியசேவை
வகுப்பு 3தரம் 11
ரூபா 60900-14X1320X6X1560 -88740

| 31.12.2003முன் | 01.01.2004இருந்து |
|---|---|
| 45900 | 60900 |
| 47220 | 62220 |
| 48540 | 63540 |
| 49860 | 64860 |
| 51180 | 66180 |
| 52500 | 67500 |
| 53820 | 68820 |
| 55140 | 70140 |
| 56460 | 71460 |
| 57780 | 72780 |
| 59100 | 74100 |
| 60420 | 75420 |
| 61740 | 76740 |
| 63060 | 78060 |
| 64380 | 79380 |
| 65940 | 80940 |
| 67500 | 82500 |
| 69060 | 84060 |
| 70620 | 85620 |
| 72180 | 87180 |
| 73740 | 88740 |

சம்பள வகுதி T-16-2
இலங்கை ஆசிரியசேவை
வகுப்பு 3 தரம்1
ரூபா 70140-9X1320X8X1560-94500

| 31.12.2003முன் | 01.01.2004இருந்து |
|---|---|
| 55140 | 70140 |
| 56460 | 71460 |
| 57780 | 72780 |
| 59100 | 74100 |
| 60420 | 75420 |
| 61740 | 76740 |
| 63060 | 78060 |
| 64380 | 79380 |
| 65700 | 80700 |
| 67020 | 82020 |
| 68580 | 83580 |
| 70140 | 85140 |
| 71700 | 86700 |
| 73260 | 88260 |
| 74820 | 89820 |
| 76380 | 91380 |
| 77940 | 92940 |
| 79500 | 94500 |

சம்பள வகுதி T-16-3
இலங்கை ஆசிரியசேவை
வகுப்பு 2 தரம்II அதிபர்தரம்III
ரூபா 82320-12X2460-111840

| 31.12.2003முன் | 01.01.2004இருந்து |
|---|---|
| 67320 | 82320 |
| 69780 | 84780 |
| 72240 | 87240 |
| 74700 | 89700 |
| 77160 | 92160 |
| 79620 | 94620 |
| 82080 | 97080 |
| 84540 | 99540 |
| 87000 | 102000 |
| 89460 | 104460 |
| 91920 | 106920 |
| 94380 | 109380 |
| 96840 | 111840 |
| 99300 | 114300 |
| 101760 | 116760 |
| 104220 | 119220 |
| 106680 | 121680 |
| 109140 | 124140 |
| 111600 | 126600 |
| 114060 | 129060 |

சம்பள வகுதி T-16-4
இலங்கை ஆசிரியசேவை
வகுப்பு 2தரம்1, ஸ்ரீலங்கா அதிபர் வகுப்பு 2தரம்2
ரூபா 105420 - 7X3000 - 126420

| 31.12.2003முன் | 01.01.2004இருந்து |
|---|---|
| 90420 | 105420 |
| 93420 | 108420 |
| 96420 | 111420 |
| 99420 | 114420 |
| 120420 | 117420 |
| 105420 | 120420 |
| 108420 | 123420 |
| 111420 | 126420 |
| 114420 | 129420 |
| 117420 | 132420 |
| 120420 | 135420 |
| 123420 | 138420 |
| 126420 | 141420 |
| 129420 | 144420 |
| 132420 | 147420 |

சம்பள வகுதி T-15-5
இலங்கை ஆசிரியசேவை வகுப்பு1
அதிபர்சேவை வகுப்பு 2 தரம் 1
ரூபா 132960-5X5520-5X6120-191160

| 31.12.2003முன் | 01.01.2004இருந்து |
|---|---|
| 117960 | 132960 |
| 123480 | 138480 |
| 129000 | 144000 |
| 134520 | 149520 |
| 140040 | 155040 |
| 145560 | 160560 |
| 151080 | 166680 |
| 156600 | 172800 |
| 162120 | 178920 |
| 167640 | 185040 |
| 173160 | 191160 |
| 178680 | 197280 |
| 184200 | 203400 |
| 189720 | 209520 |
| 195240 | 215640 |
| 200760 | 221760 |
| 206280 | 227880 |
| 211800 | 234000 |

சம்பள வகுதி T-16-6
அதிபர் சேவை வகுப்பு 1
ரூபா 13848-4X5520-6X6120 - 197280

| 31.12.2003முன் | 01.01.2004இருந்து |
|---|---|
| 123480 | 138480 |
| 129000 | 144000 |
| 134520 | 149520 |
| 140040 | 155040 |
| 145560 | 160560 |
| 151080 | 166680 |
| 156600 | 172800 |
| 162120 | 178920 |
| 167640 | 185040 |
| 173160 | 191160 |
| 178680 | 197280 |
| 184200 | 203400 |
| 189720 | 209520 |
| 195240 | 215640 |
| 200760 | 221760 |
| 206280 | 227880 |
| 211800 | 234000 |
| 217320 | 240120 |
| 222840 | 246240 |

## பயிற்சிநெறிக்கு விண்ணப்பம்

ஊர்காவற்றுறை,ஜன.19

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத தினால் மனிதவள அபிவிருத்தி பயிற் சிநெறி - 2004 இற்கான கணனிப் பயிற்சிநெறி, மீன்பிடி உபகரணங்கள் திருத்துதல், பனைவளப் பயிற்சிநெறி ஆகியவற்றிற்கு பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மேற்படி பயிற்சிநெறிகளில் இணைந துகொள்ள விரும்புபவர்கள் தத்தமது பகுதி கிராம சேவகர் அலுவல ருடன் தொடர்புகொண்டு அல்லது ஊா காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் இதுதொடர்பான மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஊர்காவற் றுறை உதவி அரச அதிபர் ஜேஎக்ஸ் செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

(எ-16)

## 'நிப்பொன்' கல்வி கலாசாரநிலைய புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

### யாழ்.மத்தியகல்லூரியில் செவ்வாயன்று நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜன. 19

ஸ்ரீலங்கா 'நிப்பொன்' கல்வி, கலாசார நிலையம் நடத்தும் ஒன்று கூடல்வைபவம் ஒன்று நாளை செவ் வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில்,கலந்துகொள்வதற்காக ஸ்ரீலங்கா நிப்பொன் கல்வி கலாசார நிலையத்தின் தலைமை அலுவலக அதிகாரிகள் மற்றும நிர்வாக உறுப் பினர்கள், கொழும்பு, அலுவலக அதி காரிகள் ஆகியோர் நான்கு நாள் விஜ யம் ஒன்றை மேற்கொண்டு இன்று திங்கட்கிழமை, யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். இவர்களுடன ஜப்பானிய நிப்பொன கல்வி கலாசார நிலைய உறுப்பினர்களும் வருகின்றனர்.

நாளை செவ்வாயக்கிழமை இடம பெறும் ஒன்றுகூடலில் யாழ். மாவட் டத்திலிருந்து 'நிப்பொன்' புலமைப் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்ட 77 மாணவர்கள் பரிசு பெறவுள்ளனர் என யாழ்ப்பாண நிலைய இணைப் பாளர் க. இராச துரை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாணவர்களின் பெற்றோர்கள், வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர் கள்,ஆசிரியர்கள் மற்றும் கல்விக் கழகப் பிரதிநிதிகள் போனறோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு சுமார் 3ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுகள் மற்றும் அன்பளிப்புகள் வழங்கப்படவுள்ளன. மாணவர்களுக்கான கல்விச சுற்றுலா வாய்ப்புக ளும வழங்கப்படவுள்ளன.

நிகழ்வின் இறுதியில் கலை, பணபாட்டுடைச் சித்திரிக்கும் வகை யிலான கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும்.

## கொள்கலன்களில் எரிபொருள்களை 10லீற்றருக்கு மேல் விநியோகிக்கக்கூடாது

### மீறினால் சட்ட நடவடிக்கை என அறிவிப்பு

தெல்லிப்பழை,ஜன.19

கொள்கலங்களில் 10 லீற்றருக்கு மேல் எரிபொருள் விநியோகிக்க வேண்டாம். அவ்வாறு உத்தரவை மீறி எரிபொருள்களை விநியோகிக் கும் விற்பனைநிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு அறிவித்துள்ளார் வட பிராந்திய பெற்றோலியக் கூட் டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமை யாளர் எஸ்.அந்தோனிப்பிள்ளை.

இது விடயமாக அவர் குடாநாட்டி லுள்ள சகல எரிபொருள் நிலையங்க ளுக்கும் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் -

சட்டப்படி எரிபொருள் நிலையங் களில் வாகனங்களுக்கு மட்டுமே எரிபொருள் நிரப்பப்பட வேண்டும். எனினும், சில அவசர அவசிய தேவை களுக்காக மட்டும் 5 முதல் 10 லீற்றர் வரையிலான எரிபொருளை விநி யோகிப்பதற்கு எரிபொருளை விநியோக நிலையங்களுக்கு அனுமதியளிக்கப பட்டுள்ளது.

இந்த கட்டுப்பாட்டிற்கு அமை வாகவே எரிபொருள் நிலையங்களில் எரிபொருளை விநியோகிக்க வேண்டும் இதற்கு முரணாக அளவுககதிகமான எரிபொருளை கொள்கலன்களில் நிரப் புவது தண்டத்திற்குரிய குற்றமாகும்.

அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும என்றுள்ளது.

(எ-150)

## வசதி குறைந்த குடும்பங்களுக்கான வீடமைப்புப் பணி பூர்த்தி


வலி.கிழக்கு,ஜன.19

கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் வசதி குறைந்த 11 குடும்பங்களுக்கென வீடுகள் அமைக்கும் பணி பூர்த்தி அடைந்துள் ளது.


இந்து கலாசார அமைச் சினால் 75 நாளில் 700 வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும்20 அடி நீளமும் 18 அடிஅகலமும் கொண்டு இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஒ-180)


## கல்விச்சாலைக் காட்சிகள்




வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணி யினால் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத்துணி வழங்கப்பட்ட நிகழ்வில் சிறுவன் ஒருவனுக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)எஸ்.சிவலிங்கம் சீருடைத்துணி வழங்குவதைப் படதில் காண லாம். கொத்தணித் தலைவர் க.மெய்யழகனும் படத்தில் உள்ளார். (எ.10)



வியாபாரி மூலை வசந்தம் முன்பள்ளிக் கலை விழாவில் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் எஸ். மகேஸ்வரராஜா சிறுவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



புத்தூர் மெ.மி.த.க.பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் செல்லையா யோகேஸ்வரனின் உருவப்படத்தை யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் திரைநீக்கம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம். (எ-180)



புங்குடுதீவு ஐக்கிய அபிவிருத்திச் சங்கம் நடத்திய முன்பள்ளி மாண வர்களுக்கான விளையாட்டுப்போட்டியில் புங்குடுதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலய அதி பர் க.சண்முகலிங்கன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (எ-88)

HND HND HND

Delivered Locally.... Recognised Globally Delivered Locally.... Recognised Globally

Edexcel International, UK

BTEC

HND

World Class Qualifications

New Batch Starts on 23-01-2004 at 10.00 a.m

Delivered Locally....
Recognised Globally

கணனித்துறையில் பட்டப்படிப்பு

நீங்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? ஆம் எனில் இச்சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். Edexcel International நிறுவனத்தின் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சர்வதேச தரம் வாய்ந்த B.Sc. (Hons) பட்டப்படிப்பினைத் தொடரமுடியும்.

சர்வதேச சான்றிதழ்கள்

BTEC HND (Higher National Diploma) என்பது கணனித் துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சிநெறியாகும். 18 மாதகாலப் பயிற்சியின் முடிவில் பிரிட்டனின் Edexcel இன் சர்வதேச டிப்ளோமா சான்றிதழ்களை நீங்கள் பெறுவீர்கள். Edexcel என்பது லண்டன் ஜி.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும்.

வெளிநாட்டில் படிப்பைத் தொடரலாம்

IIS நிறுவனத்தில் BTEC HND (Highe[illegible]ational Diploma) பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஐ[illegible]கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களின் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் பொருளாதாரரீதியாக நன்மை அடையமுடியும்

தே[illegible]ய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்

IIS நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்க[illegible]க்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது,

*மேலதிக விபரங்களுக்கு* 021-2222831 / 021-2226933 அல்லது இல.100, மணிக்கூட்டுக்கோபுர வீதி, அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

*ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் உங்கள் பதிவுகளிற்க முந்துங்கள்*

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
An *Edexcel* Approved Training Centre
100, Clock Tower Road, Jaffna
T.P No: 021 222 2831 - Email: iis@sltnet.lk

(சி32843)

## விவசாய உபகரணம் அன்பளிப்பு

சண்டிலிப்பாய்,ஜன.19

மூவிமென்ரோஸ் நிறுவனம் பண்டத்தரிப்பு மற்றும் வடலியடைப்பு கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு வீட்டு தோட்ட செய்கைக்கான விதைகள் மற்றும் உபகரணங்களை அண்மையில் வழங்கியுள்ளது.

வாளி, மண்கிண்டி, அரிவாள், கத்தி ஆகிய உபகரணங்களே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. (எ-135)

## இந்தியா...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும். யுத்தம் தேவையில்லை என சர்வதேச நாடுகள் கருதுமாக இருந்தால் இந்தப் பிரச்சினையை தீர்க்க முழுமையான அழுத்தத்தை அரசுக்குக் கொடுக்கும் காலகட்டம் வந்துள்ளது.

★ கேள்வி: விடுதலைப் புலிகளுக்கும் தங்கள் அமைப்புக்கும் இடையிலான உறவு குறித்து...?

■ பதில் : கடந்த காலத்தில் பாரிய கசப்புணர்வு எம்மத்தியில் இருந்தது. அதை மூடிமறைக்கத் தேவையில்லை. புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டபின் விடுதலைப் புலிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தினோம். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கூடச்சந்தித்து தனியாக 3.4 மணித்தியாலம் கலந்துரையாடினேன்.

தமிழ்மக்கள் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் ஒரே குரலில் பேசவேண்டும என விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள் எனக்கருதுகிறேன். இவ்வளவு காலப் போராட்டத்துக்கும் தியாகத்துக்கும் கௌரவமான தீர்வு வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். அந்தத் தீர்வைக் கொண்டுவரக் கூடிய வல்லமை - அரசைப்பேச்சு மேடைக்கு கொண்டுவரக்கூடிய வல்லமை - விடுதலைப் புலிகளின் ஆயுத பலம்தான். அந்த ஆயுதபலம்தான் அரசைப் பேச்சுமேசைக்குக் கெண்டு வந்துள்ளது.

அந்த ஆயுதபலம் என்பது எமது பேச்சு முடியும்வரை காப்பாற்றப்பட வேண்டும். அந்தப் பலத்தின் ஊடாகத்தான் நாம் பேசமுடியும்.

விடுதலைப் புலிகளுக்கு முன்னர் இந்திய அமைதிகாக்கும் படை ஊடாக நாங்கள், ரெலோ ஏனைய இயக்கங்கள் பேச்சு நடத்தியுள்ளோம். எமது இராணுவ பலம் எமது கையைவிட்டுப் போனபின் நாங்கள் கூறியவை எல்லாம் 'செவிடன் காதில் ஊதிய சங்காகவே' முடிந்தது. அதையாரும் ஏற்றுக் கொண்டதாக இல்லை.

இன்றைய காலகட்டத்தில் அந்த இராணுவபலத்தை விடுதலைப் புலிகள் வைத்திருக்கும்போது, அதில் எவ்வளவுதான் தவறுகள் நடந்தாலும் அவர்களின் பலத்தைப்பலவீனப் படுத்துவது ஒட்டுமொத்தத்தீர்வு என்ற நோக்கில் பார்க்கும் போது கூடாது என்பதை எமது அமைப்பு புரிந்துள்ளது. அதில் நம்பிக்கை வைத்திருக்கின்றது. அந்த வகையில் விடுதலைப் புலிகளுக்கும் எமக்குக்கும் இடையில் தீர்வை நோக்கி பாதையில் ஒருமித்த கருத்துக்கள், சிந்தனைகள் இருக்கின்றன.

எமது கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உள்ள புரிந்துணர்வு ஏனைய தமிழ்க்கட்சிகளுக்கும் ஏற்படவேண்டும்.

★ கேள்வி: தீர்வை நோக்கிய பாதையில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவோம் என்று கூறுகிறீர்கள், அந்தத் தீர்வு யுத்தமாக இருந்தால் தொடர்ந்து புலிகளுடன் நட்புறவைத் தொடர்வீர்களா?

■ பதில்: நிச்சயமாக நாம் நம்புகிறோம், இன்னுமொரு யுத்தம் வரமாட்டாது என்று, வரவிடக்கூடாது. இதில் உறுதியாக இருக்கின்றோம்.

★ கேள்வி: விடுதலைப் புலிகளுடன் ஈரோஸ் இணைந்து செயற்படுவதுபோல உங்கள் அமைப்பும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுமா?

■ பதில்:- தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மிகவும் தெளிவாகக் கூறினார். "உங்களது தனித்துவங்களை நீங்கள் காப்பாற்றிக்கொண்டு எப்படி இணைந்து வேலைசெய்வது என்று முடிவுசெய்யலாம்" என்று அவர் கூறியுள்ளார். அந்த வகையில் ஜனநாயக ரீதியாக மற்றவர்களும் செயற்படவேண்டும் என்பதில் அவர்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை.

அவர்கள் தங்களை 24 மணி நேரத்தில் மாற்றிக்கொள்ள முடியாது. கால அவகாசம் தேவை ஜனநாயகத்தை நோக்கிய பாதையில் புரிந்துணர்வு நிச்சயம் ஏற்படும்.

# புருவங்களை உயரச்செய்த மகளிர் இசைக்குழு

ஆண்களை விட எந்த வகையிலும் பெண்கள் சளைத்தவர்கள் அல்லர். அவர்களால், எதனையும் சாதித்து விட முடியும் என்ற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கருத்தை நிரூபிக்கும் வகையில் தமிழீழப் பெண்கள் இதுவரை சாதித்தவை ஏராளம்.

கனரக ஆயுதங்களை ஏந்திக்களமாடி வெற்றிகளைக் குவித்தது முதல் கரும்புலிகளாக எதிரியைக் கலங்க வைத்தது வரை பெண் புலிகள் படைத்த சாதனைகளை உலகமே வியப்புடன் நோக்குகிறது.

அத்தகைய பெண்களை ஏனைய துறைகளைப் போலவே கலைத்துறையிலும் உயர்த்துவதற்காக விடுதலைப் புலிகளின் தலைவரின் சிந்தனைச் செயற்பாடுகளின் ஒரு பெறுபேறுதான் தமிழீழ மகளிர் இசைக் குழு.

ஒருசில பாடகர்களைத் தவிர அறிவிப்பாளர் முதல் வாத்தியக் கலைஞர்கள் வரை அனைவருமே பெண்கள். கலைஞர்களில் அரைவாசிப் பேர் வரையில் போராளிகள். ஏனையோர் கலை பண்பாட்டுக்கழக மகளிர் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

பெண்கள் என்றால் இசைத் துறையில் நீண்டஅனுபவம் வாய்ந்த - வயது கூடிய - பெண்கள் அல்லர் அவர்கள். இவர்கள் 16 முதல் 22 வரையான சிறுமிகளும் யுவதிகளும் தான்.

கலைக்கு வயதும் அனுபவமும் முக்கியம் அல்ல. கலைப்பற்றும் நெறிப்படுத்தலும்தான் என்பதை நிரூபிக்கும் வகையில் இசைத்துறையில் சிறப்பான வளர்ச்சிபெற்று வீறு நடை போட்டுக் கொண்டிருக்கிறது தமிழீழ மகளிர் இசைக்குழு.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வின்போதுதான் அவர்களது முதலாவது அரங்கேற்றம். அதன்பின்னர் வன்னியின் பலபாகங்களிலும் இதுவரை 12 நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றார்கள். 13ஆவது நிகழ்ச்சி தீருவிலிலும், 14ஆவது நிகழ்ச்சி யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கிலும் நடைபெற்றன.



நேற்றுமுன்தினம் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவின் இறுதிநிகழ்வாக மகளிர் குழுவினரின் இசைநிகழ்ச்சி அரங்கேறியது. திரை விலகியதும் தமக்கே உரித்தான அழகான சீருடைகளுடன் பல்வேறு வாத்தியக் கருவிகளுடன் அரங்கை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள் இசைக் கலைஞர்கள்.

கனரக ஆயுதங்களை ஏந்தி சமராடிய பெண்புலிகளின் கைகளில் இசைக்கருவிகள்.....

அரங்கு நிறைந்த சனக்கூட்டம். திரை விலக்கப்படும் வரை அரங்கில் இருந்தோர் அனைவரிடமும் ஒருவித அங்கலாய்ப்புத் தெரிந்தது.

கலைஞர்கள் அனைவருமே பெண்கள். இதுவரைக்கும் இப்படியான ஒரு மகளிர் இசைக்குழுவின் நிகழ்ச்சியைப் பார்த்ததே இல்லையே. அப்படி ஓர் இசைக்குழு இருப்பதாகக் கேள்விப்பட்டது கூடக் கிடையாதே. இதுதான் அங்கிருந்த அனைவரினதும் அங்கலாய்ப்புக்கும் அவசரத்துக்கும் காரணம்.

நிகழ்வு அங்கிருந்த அனைவரையுமே பிரமிப்பில் ஆழ்த்தி விட்டிருந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை.

கலைபண்பாட்டுக் கழகத்தின் வழிநடத்தலில், போராளி இசை அமைப்பாளரான இசைப்பிரியனின் நெறியாள்கையில் இவர்கள் சிறப்பாகப் பயிற்றப்பட்டிருந்தார்கள்.

ஒவ்வொரு பாடல்களுக்கும் இடையில் இடைவெளி என்பதே இருக்கவில்லை.

பல ஆண் கலைஞர்களைக் கொண்ட தமிழீழ இசைகுழு உட்பட இங்குள்ள தமிழ் இசைக்குழுக்கள் அனைத்திலுமே ரசிகர்களால் நீண்ட காலமாகச் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்ற குறைபாடு என்னவென்றால் ஒவ்வொரு பாடல்களுக்கும் இடையில் நேர இடைவெளி அதிகமாக இருக்கின்றது என்பதாகும்.

ஒவ்வொரு பாடல்களையும் ஆரம்பிப்பதற்கு முன்னர் இசைக்கருவிகளை அதற்கேற்ற வகையில் தயார் செய்வதற்கு சிறிது நேரம் எடுக்கும். இந்த நேர இடைவெளி ரசிகர்களை சலிப்படையச் செய்துவிடுவது மறுக்க முடியாதது.

ஆனால், தமிழீழ மகளிர் இசைக் குழுவில் அத்தகைய நேர இடைவெளி என்ற பேச்சுக்கே இடமில்லை. நிகழ்ச்சியைப் பார்த்த அனைவருமே அதனை வெகுவாகப் பாராட்டினார்கள்.

**தொகுப்பு: சந்திரமதனா**

கலைஞர்கள் ஒவ்வொருவரும் தமக்குரிய இசைக்கருவிகளை மட்டுமன்றி ஏனைய வாத்தியங்களையும் மாறிமாறி வாசித்துக் கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. சில கலைஞர்கள் பல்வேறு வகையான இசைக்கருவிகளையும் இயக்குவதற்கு கற்றுக்கொண்டிருந்தார்கள்.

இசையமைப்பில் தடங்கல்கள் எதுவுமின்றி சிறந்த ஓர் அனுபவம் மிக்க இசைக் குழுவினரைப் போல இசை வழங்கிய பெண்களைப் பார்த்த போது எமது நாட்டில் இப்படி ஒரு திறமையான - வித்தியாசமான - இசைக் குழு வளர்ந்து வருவதை அல்ல வளர்ந்து நிற்பதைப் பார்த்த பொழுது உள்ளூர ஒருவித திருப்தியும் மகிழ்வும் ஏற்பட்டது.

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையில் உருவான நவம் அறிவுக் கூடத்தில் கடந்த இரண்டு வருடங்களாக இந்தக் கலைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த இசைக்குழுவின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றிவரும் கலை பண்பாட்டுக்கழக மகளிர் பொறுப்பாளர் அருள்நிலாவிடம் இது குறித்துக் கேட்டோம்.

எமது பெண்போராளிகளை பல்வேறு துறைகளிலும் வளர்த்து விட வேண்டும் என்ற தலைவருடைய சிந்தனைக்கு அமைவாகவே இந்த இசைக் குழு ஆரம்பிக்கப்பட்டது.

இப்பொழுது மேடையேறி வரும் இடங்களில் எல்லாம் நிறைந்த பாராட்டுக்கள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

இவர்கள் தாங்களாகவே ஒரு இசைப் பேழை உருவாக்கத்தினை செய்யும் அளவுக்கு இந்தக் கலைஞர்களை வளர்த்து விடுவதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கான பயிற்சிகள் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ளன.

முற்றிலும், பெண்களைக் கொண்டு இயங்கும் இசைக்குழு இதுவரை இங்கு இருந்ததில்லை. இப்போதுதான் முதல் தடவையாக நாங்கள் அத்தகைய ஓர் இசைக் குழுவினை ஆரம்பித்து வளர்த்துவருகிறோம் - என்றார்.

நிச்சயமாக இவர்கள் இசைத் துறை யில் இன்னும்பல சாதனைகளைப் படைப்பார்கள் என்று உறுதியாக நம்பலாம்.

## கலைச்சுடர்

தயாரிப்பு:-அற்புதன்

# கலாசாரச் சீரழிவுகள் குறித்த விழிப்பை ஏற்படுத்திய ஆற்றுகை

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்களால் அரங்கேற்றப்பட்ட "நல்லதோர் வீணை செய்ய" என்ற சமூக ஆற்றுகை குறித்த ஒரு பார்வை இங்கு விரிகிறது...**

அண்மையில் பருத்தித்துறைப் பிரதேச கலாசாரப் பேரவையினால் வட இந்துமகளிர் கல்லூரியில் நடத்தப்பட்ட சாகித்திய விழாவில் ஹாட்லிக் கல்லூரி பழையமாணவர்களால் அரங்கேற்றப்பட்ட 'நல்லதோர் வீணை செய்ய" என்ற நாடகம் மேலைத்தேயக் கலாசாரம் குடாநாட்டுச் சமூகத்தினுள் ஊடுருவியதைப்பற்றித் தெளிவுடுத்தியது.

**சு.வரதன்**
**யாழ். பல்கலைக்கழகம்**

பாடசாலைகளில் குடியேறிய சீருடையினர் மாணவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். மாணவர்களுடன் தாம் அன்பாக இருப்பதுபோல் பாவனை செய்துகொண்டு அவர்களின் கல்வியைத் திட்டமிட்டுக் குழப்பினர். அவர்கள் கல்வி பற்றியோ - தேசவிடுதலை பற்றியோ- சிந்திப்பதை தவிர்ப்பதற்காக, நீலப்படங்களை விநியோகித்தனர். திரைப்படங்களை வரவேற்றனர். இவ்விடயங்களுக்கு அடிமைப்பட்டுப் போனவர்களின் அவலநிலை தொடர்கிறது என்பதை பேசமுற்பட்ட சமூக ஆற்றுகைதான் 'நல்லதோர் வீணை செய்ய'.

ஒரு மங்கிப்போன பானையைப் பற்றி கதைப்பதுடன் நாடகம் ஆரம்பமாகியது. தேசத்தின் விழுமியம் கெட்டுவிட்டது. பொருண்மியம் சிதைந்துவிட்டது. யார் காப்பார்கள்...? கேள்விகள் பலமாக பார்வையாளர் செவிகளில் ஒலித்தன.

கதை தொடங்கியது; ஏழைவீட்டு மகனும் பணக்கார வீட்டு மகனும் படிக்கச் செல்கின்றனர். சீருடையினர் இவர்களை மறித்து மதுவைப் பருக்கினர். ஏழை வீட்டு மகன் வீட்டில் மல்லாந்து கிடக்கிறான். பெற்றோர் இவனுக்கு நோய்பிடித்துவிட்டது என்று வேதனையுறுகின்றனர். இக்காட்சி அண்மைக்காலத்தில் பாதிப்புக்குள்ளான மாணவர்களையும் பெற்றோர்களையும் நினைவுபடுத்திச் சென்றது.



நாடகத்தின் மையக் காட்சியில் தாய் ஒருவர் சீருடையினரினால் கற்பழிப்புக்குள்ளாகிறாள். இதனால், அவள் மன உளைச்சலுக் குள்ளாகின்றாள். இது ஒரு ரோஜா உதிரும் காட்சிக்கூடாகக் காட்டப்படுகிறது. மனம் படபடத்துப்போகிறது. யாழ்ப்பாண மக்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள் என்ற அரசின் பொய்ப் பிரசாரத்தை வெளிப்படுத்தியது அந்தக் காட்சி.

பிச்சைக்காரப்பாத்திரம் பார்வையாளர் பகுதியில் இருந்து அரங்கு நோக்கி நகர்கிறது. பிச்சை எடுத்து சாராயம் குடிப்பது இன்று சகஜமாகிவிட்டதுதானே.

காரணத்தைத்தேடும் முயற்சியில் நாடகம் வெற்றி கண்டுள்ளது.

"இப்படி மாறிப்போனான் இவன்..." என்ற பாடல் வரிகள் திரைப்பட மோகம் பிடித்த மாணவர்களின் நிலைப்பாட்டை வலியுறுத்தியது.

மன்றங்கள், கழகங்கள் புனரமைப்புச் செய்வதன் மூலம் லாபம் தேடும் சமூகப் பெரியோர்கள் அதிகமாகிவிட்டனர். மன்றத்தில் புனரமைப்பு என்றால் நிர்வாகியின் வீட்டிலும் புனரமைப்புத் தொடங்கிவிடும் என்பதை நகைச்சுவையான உரையாடல் வெளிப்படுத்திவிடுகிறது.

இறுதிக்காட்சி நல்லதொரு தேசம் அமைக்க தீயவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்பதை ஆழமாக வலியுறுத்தியது. ஒட்டுமொத்தமான இந்தப் படைப்பு யாழ்ப்பாண சமூக கண்கள் கட்டப்பட்ட நிலையில் வாய்கள் பொத்தப்பட்ட நிலையில் இருக்கின்றன என்பதை உணர்த்திச் சென்றது. ★

# ஜே.வி.பி.-ஸ்ரீ.ல.சு.கட்சி உடன்படிக்கை நிகழ்வில் சோமவன்ஸ பங்கேற்பு?

கொழும்பு,ஜன.19

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. இடையிலான கூட்டு உடன்படிக்கை நாளை கைச்சாத்திடப் படவுள்ளது. இது தொடர்பான நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஜே.வி.பி. தலைவார் சோமவனஸ அமரசிங்க பிரிட்டனிலிருந்து இலங்கைக்கு வரக்கூடும் என்று கூறப்படுகிறது. ஜே.வி.பி. கிளர்ச்சியையடுத்து சோமவன்ஸ கைதுசெய்யப்பட இருந்தார். அதிலிருந்து தப்புவதற்காக அவர் பிரிட்டனுக்குச் சென்றார். அங்கிருந்தபடியே கட்சி நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டார்.கடந்த பொதுத் தேர்தலின் போது இலங்கைக்கு வந்த அவர் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். பின்னர் மீண்டும் சோமவன்ஸ பிரிட்டனுக்குச் சென்றுவிட்டார். தற்போது மீண்டும் அவர் இலங்கைக்கு வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பி இற்கும் இடையே நாளை கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது. இந்தக் கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்த இரு கட்சிகளும் திட்டமிட்டுள்ளன.

இந்தக் கொண்டாட்ட நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக சோமவன்ஸ இலங்கை வருவார் என்று 'தினமின' சிங்களப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ)

## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.19

கடையின் மேல்மாடியில் நிறுத்தப்பட்டிருந்த ஆண்கள் பயன்படுத்தும் துவிச்சக்கரவண்டி ஒன்று திருட்டுப் போயுள்ளது.

திருநெல்வேலிச் சந்தை வளாகத்தினுள் அமைந்துள்ள கடையொன்றிலேயே மேற்படி திருட்டு கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. (எ-69)

## மின்மாற்றி பொருத்தப்பட்டது

புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்திக்கு அண்மையில் புதிதாக மின்மாற்றி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

மேற்படி மின்மாற்றியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வடக்கு மற்றும் குப்பிளானில் ஒரு பகுதி ஆகியவற்றுக்கு விரைவில் மின்சாரவிநியோகம் வழங்கப்படவுள்ளது எனக் கூறப்பட்டது. (எ-69)

# கொழும்புத்துறை கிழக்குக்கு மின்விநியோகம் ஆரம்பம்

கொழும்புத்துறை,ஜன.19

கொழும்புத்துறை கிழக்கு நெடுங்குளம் வீதிக்கு இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

போர் நடவடிக்கைகளால் இப்பகுதியில் கடந்த நான்கு வருடங்களாக மின்சார வசதியின்றியே இப்பகுதி மக்கள் வாழந்து வந்தனர். தற்போது கொழும் புத்துறை கிழக்கின் ஒரு பகுதியாகிய நெடுங்குளம் வீதிக்கே மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இன்னும் முதலாம் குறுக்கு வீதி தொடக்கம் ஐந்தாம் குறுக்கு வீதி வரையான பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இதேவேளை, இப்பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று, பலர் பயன்படுத்துவதால், இணைப்புப் பெற்ற மின்பாவனையாளர்களுக்கு, வலுக்குறைந்த மின்சாரமே கிடைப்பதாகவும் கூறப்படுகிறது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் சட்டவிரோத மின்பாவனையால் இலங்கை மின்சாரசபைக்கு கணிசமான மின்வலு இழப்பு ஏற்படுவதாக மின்சார சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

(ஒ-30)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

0111WP H.K தொடர் இலக்க முடைய TATA இனக் கென்ரர் - 450 சிவப்பு நிறம் 15000Km ஓடிய நிலையில் விற்பனைக்குண்டு. (மேற்படி வாகனம் பினான்ஸ் அடிப்படையிலானது) தொடர்புகளுக்கு: 265/½, புளுமண்ட் ஸ்ரீட், கொழும்பு-13. T.P.:011 385530, 0777 666 704. (27190)

350-E.L.F றக்கிர்குரிய கூழர் பொடியும் (Coolar Body)Xமொடல்றைக்கருமரெயிலரும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: K.N.சுரேஸ், ஐயனார் கோவில் ஒழுங்கை, தாண்டிக்குளம், வவுனியா. (27260)

2 மாதம் நிரம்பிய தூய இன டோமன் பிஞ்சர் - அல்ஷேசன் குறெஸ் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.06, நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஸ்ணமிஷன் பாடசாலை பின் வீதி), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். நேரம் மாலை 5-6 மணிவரை. (27220)

பாவனையில் உள்ள மவுண்டன் துவிச்சக்கரவண்டி ஒன்றும் சிறுவர்களுக்கான லுமாலா ½சிறிய துவிச்சக்கரவண்டி ஒன்றும் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிட தொடர்பு: மு. விமலநாதன் 27/20, புங்கன்குளம் வீதி (நாகராசா லேன்), பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். (27314)

## வாடகைக்கு

திருமண சேவைக்கு மட்டும் வாடகைக்கு விடுவதற்கான New Model (2000 Model) வெள்ளைக்கார். தொடர்புகளுக்கு: 0777-113880,021 222 7357. (27124)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள 19.01.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறைக்கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம் (நல்லூர் வீடியோ சென்ரா வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(27264)

பகிரா இன புறொயிலர் கோழிக் குஞ்சுகள் 21.01.2004 மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P.: 3529, 2867. (27292)

## திருமண சேவை

1963 இல் பிறந்த, 4 இல் செவ்வாய், 30 பாவம் அனுஷ நட்சத்திரம், லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு 1968, 1969 இல் பிறந்த மணமகள் தேவை. டாக்டர், பொறியியலாளர், லிகிதர், பட்டதாரிகள், ஆசிரியர் முதலான வெளிநாட்டு மணமக்களும் எம்மிடம் உள்ளனர். தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 361, கோயில் வீதி, நல்லூர். (27308)

1971, அச்சுவினி, பாவம்18, P.R. உள்ள U.K. Engineer மணமகனுக்கு சுன்னாகம், கரவெட்டி, கல்வியங்காடைச் சேர்ந்த Dr. அல்லது Cima படித்த அழகான மணப்பெண் தேவை. படத்துடன் விண்ணப்பிக்கவும். துரை விமலா இலகு திருமண சேவை, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். (27209)

## ஒரே ஒரு நூல்

"வானொலி நாடகம் எழுதுவது எப்படி?" என்ற முதலாவது தமிழ் நூல். 365 நாடகங்களும் 10 நாடக நூல்களும் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. ரூபா 150/=. (27259)

## வீடு விற்பனைக்கு

புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. T.P.:0777570279, 0777305533. (C/32826)

## தேவை

கொழும்பிலே உள்ள சிறிய தமிழ்க குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலைகள் செய்து, கைக்குழந்தையைப் பராமரிக்கக்கூடிய பெண் வேலையாள தேவை. 45 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது. தொடர்பு:0717 323192 (C/32849)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

G.C.E. (O/L) Year 2005 புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது. அனுபவ, சிறந்த ஆசிரியர்கள் பிரிவில் 15 மாணவர்களுடன் தனித்தனி கவனங்கொடுத்து கூடிய மதிப்பெண்களைப் பெற பதிவுக்கு தலைமை ஆசிரியர்:

விக்கினேஸ்வரன் ஆச்சாரி.
426(302)K.K.S.வீதி,
யாழ்ப்பாணம் (27310)

# பிற்போடப்பட்டுள்ளது

கோண்டாவில் புனித செபஸ்தியார் ஆலய திருவிழாவும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும்

நாளை (20.01.2004) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த கோண்டாவில் புனித் செபஸ்தியார் ஆலய திருவிழாவும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் இந்த வருடம் ஜூலை மாதம் 2 ஆம் ஞாயிறு தினத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளது. சீட்டுப் புத்தகங்களைப் பெற்றவர்கள் அவற்றைத் தொடர்ந்து விற்பனை செய்யவும்.

பங்குத் தந்தை
அருள்திரு.கு.யே.அன்ரனிபாலா.

(27312)(34-26-14-16)

# உளசமூக மேம்பாட்டு ஊக்குவிப்பாளர்களுக்கான குறுகிய கால பயிற்சி நெறி

மேற்படி பயிற்சிக்காக ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சிக்காலம்: 1½ மாதங்கள் (*விரிவுரை, களப்பயிற்சி, மேற்பார்வை உட்பட*)

பயிற்சிக் கட்டணம்: 1500/=

வயதெல்லை: 22 இற்குமேல்.

கல்வித்தகைமை: க.பொ.த.உயர்தர சித்தி.

விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 23.01.2004இற்கு முன் நேரிலோ, தபாலிலோ அனுப்பிவைக்கவும்.

தேர்வின் மூலமாகவே பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பணிப்பாளர்,
சுகவாழ்வு நிலையம்.
16. 3ஆம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம்.

(26-14-16) (27291)

# Sale sale sale Net Sale sale sale

31 தை மட்டுமே!

PI, PII, PIII, PIV வகையான சகலவித கணனி வகைகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்வதுடன் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் கணனிகளின் சகலவிதமான திருத்த வேலைகளையும் செய்துகொள்ளவும் சகலவிதமான MOBILE PHONE களைப் பெற்றுக்கொள்வதோடு Un Locking மற்றும் திருத்த வேலைகளையும் உடனுக்குடன் செய்து கொள்ளவும் நாடவேண்டிய ஒரே இடம்:

NET (PVT) LTD,
34, சட்டநாதர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொலை.பேசி.இல.:021-2223786
**NORTH EAST TECHNOLOGIES (NET)**

(C/32847) (26-14-16)

# பிறந்த நாள் நினைவும் பிரிந்தநாள் நினைவும்

பிறப்பு 1896 - 01 - 19



பிரிவு 1975 - 12 - 13

மண்ணில் 01 - 09 - 1910

விண்ணில் 30 - 01 - 1942

**Dr. விஸ்வநாதர் சின்னையா**

நிலப்பிரபு குளுவான் மலேசியா

அன்னையும் தந்தையும் தானே
பாரினில் அண்டசராசரம்;
கண்கண்ட தெய்வம்!
கண்கண்ட தெய்வங்கள் காற்றில் பறந்தன
காலமெல்லாம் கலங்குவதல்லாது யாதுமறியேன்.
*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*

கோடீஸ்வரனின் ஏழைமகள்
திருமதி லோ. இராசநாயகம்

**திருமதி வள்ளியம்மை சின்னையா**

பொன்னாலைக் குளுவான் மலேசியா

அறியாத வயதில் அவனியையா
விட்டேகிய அம்மா
*உங்கள் ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

(27129) (26-14-16)

# இரண்டாம் வருட நினைவலைகள்



அமரர்

## கந்தையா பொன்னம்பலம்

(B.A.)
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர். வனத்திணைக்களம்)

தோற்றம் 16.04.1943 — மறைவு 11.02.2002

திதி: 20.01.2004

அன்பின் உறைவிடமே! ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும் உமது நினைவு மட்டும் மறையவே மறையாது.
*ஓம்சாந்தி!*

*உங்கள் பிரிவால் வருந்தும்:*
அன்பு மனைவி,
மக்கள்.

"சாயி இல்லம்",
பண்ணாகம், சுழிபுரம். (34-26-16-14) (27277)

# நெஞ்சை விட்டகலாத அன்புத் தெய்வங்கள்

33ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி உலகேஸ்வரன்** [ஈசன்]

மலர்வு: 17-11-1948
உதிர்வு: 18-12-2003

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சரஸ்வதி சின்னத்தம்பி** [செல்லாச்சி]

மலர்வு: 15-04-1926
உதிர்வு: 31-12-2002

"அன்று எம்முடன் வாழ்ந்து மறைந்தீர்கள்
இன்று மறைந்தாலும் எம்முடன் வாழ்கின்றீர்கள்"

கொக்குவில் கிழக்கு,
நந்தாவில். (27307)

*உங்கள் பிரிவால் வருந்தும்:*
- குடும்பத்தினர். (26-14-16)

அம்பலவாணர் வீதி,
உடுவில்.

# மரண அறிவித்தல்

## ஆசீர்வாதம் லாசறஸ் (ராசமாணிக்கம்)

(மண்டைதீவு)

மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசீர்வாதம் லாசறஸ் (17.01.2004) சனிக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் - மரியாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற வரப்பிரகாசம் - மரியப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் மரியதிரேசாவின் அன்புக் கணவரும் ஜொய்சி, சறோ, சுலோசனா, யூசினா, யைசினா, ராஜ்குமார், கசில்டா, ஜெனிஸ்பியர், மேரிதிரேசா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராசமலர், வேதநாயகம், ஆரோக்கியநாதர், மனோகரசீலி, பத்திமா, தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தங்கராசா, தங்கத்துரை, பொன்னுத்துரை, செல்லத்துரை மற்றும் தங்கரட்ணம், சின்னத்துரை, இரத்தினசாமி, இருதயநாதர், பொன்மணி, மாசில்லாமணி, பத்தி, தேவா, குணவதி ஆகியோரின் மைத்துனரும் பீற்றர்தாஸ், காலஞ்சென்ற ராஜன் மற்றும் ரவி ஆகியோரின் அன்பு மாமனாரும் அஜந்தா, பிரசாத், மயூறி, கியூறி, பிறின்சி, டிம்சி, டிறக்ஸன், டினேஸ், டிலக்சனா, சிலோஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.01.2004) திங்கட்கிழமை பி.ப.2.30 மணியளவில் மண்டைதீவு புனித இராயப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, ஆராதனையின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. (27304) (26-16-14)

தகவல்:
இ.பீற்றர்தாஸ் *(மருமகன்)*

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 544 |
| திகதி | 16.01.2004 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5446389-5461196

வெற்றி இலக்கங்கள் **32 46 48 54**

லக்கினம்

துலாம்




ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை.

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,730,250/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 326,989 | 10 | 3,269,890 |
| 2 இலக்கங்கள் | 30,047 | 20 | 600,940 |
| 1 இல + லக்கினம் | 29,803 | 30 | 894,090 |
| 2 இல + லக்கினம் | 2,703 | 100 | 270,300 |
| 3 இலக்கங்கள் | 802 | 500 | 401,000 |
| 3 இல + லக்கினம் | 65 | 5,000 | 325,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 390,414 | - | 6,261,220 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.6,261,220/-

தொடர் இல. 4474792க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 20ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5455737-2-32
5456571-1-03
5447302-7-20
5452612-0-98
5453150-5-18

PHOENIX O&M



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3275070 இருந்து
3292147 வரை
சீட்டிழுப்பு இல. 1471
திகதி 17.01.2004




வெற்றி எண்கள் **03 05 21 38 52**

போனஸ் எண் **09**

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 97 | 10,000/- | 970,000/- |
| 3 | 5,312 | 500/- | 2,656,000/- |
| 2 | 88,127 | 20/- | 1,762,540/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 108,557 | 10/- | 1,085,570/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,274,110/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா.1,500,000/-

தொடர் இல. 2320937க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 21ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3284366-0-85
3284516-7-22
3279312-2-20
3277240-4-56
3282360-3-61

PHOENIX O&M


# கோப்பாய் தெற்குப் பகுதியில் வலுக்குறைந்த மின்சாரம்

யாழ்ப்பாணம்,ஜன.19

கோப்பாய் தெற்கு டச்சு வீதிப் பகுதியில் கடந்த ஒருவாரத்துக்கும் மேலாக இரவு வேளைகளில் வலுக் குறைந்த மின்சாரம் வழங்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக மின்சாரசபையினிடம் முறையிட்டும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை வலுக் குறைந்த மின்சாரமே வழங்கப்படுவதாகவும் -

இதன் காரணமாக மின்வலு கூடிய உபகரணங்கள் இயங்கமுடியாத நிலை காணப்படுவதுடன் மாணவர்களும் கல்வி கற்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)

# மண் பரிசோதனை செய்வதற்கு விரைவில் வசதி செய்து தருக!

## யாழ். விவசாயிகள் கோரிக்கை

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாய நிலங்களில் காணப்படும் மண் நண்டகாலமாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. இதனால் விவசாய முயற்சிகளில் பின்னடைவை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

எனவே, விரைவில் மண் பரிசோதனை செய்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

உடுவில் கமநல சேவைகள் நிலையத்துக்கு வருகைதந்த நெல் உற்பத்தி சந்தைப்படுத்தல் அமைச்சர் டி.எம்.பண்டாரநாயக்கவிடம் உடுவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களின் சார்பில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

உடுவில் கமநல சேவை நிலையத்துக்கு அமைச்சர் டி.எம்.பண்டாரநாயக்கா, கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர் ஆகியோர் கடந்த வாரம் விஜயம் செய்திருந்தனர்.

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசனும் இவர்களுடன் வருகை தந்திருந்தார்.

உடுவில் கமநல சேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தர் எஸ். சோதிநாதன், விவசாயிகள் சம்மேளனத் தலைவர் செ.இலகுநாதன் மற்றும் விவசாயப் பிரநிதிகள் ஆகியோருடன் அமைச்சர் குழுவினர் கலந்துரையாடி குறைநிறைகளைக் கேட்டறிந்தனர்.

யாழ். குடாநாட்டில் விவசாய நிலங்களில் உள்ள மண் பரிசோதனை செய்யப்படவேண்டும் என்றும் -

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களை சந்தைப்படுத்துவதற்கு ஒழுங்கு செய்து தரப்படவேண்டும் என்றும் -

விவசாய சம்மேளனங்களின் சார்பாக செ.இலகுநாதன் அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

உடுவில் கமநல சேவை நிலைய செயற்பாடுகள் பற்றியும், மேலும் இவ்வருடம் மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் பெரும்பாக உத்தியோகத்தர் விரிவாக எடுத்துக் கூறினார்.

மண் பரிசோதனை, விளைபொருள்களை சந்தைப்படுத்தல் போன்ற கோரிக்கைகளை விவசாய அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக நெல் உற்பத்தி அமைச்சர் தெரிவித்தார். (எ-152)

# புத்தூரில் வளர்ப்புநாய்களுக்குத் தடுப்பூசி

அச்சுவேலி,ஜன.19

புத்தூர் பகுதியில் வளர்ப்புநாய்களுக்கு நாளை விசர்நோய்த் தடை மருந்து (ஏ.ஆர்.வி) ஏற்றப்படவுள்ளது.

வலி.கிழக்கு பிரதேசசபையின் புத்தூர் உபஅலுவலர் பிரதேசத்தில் விசர் நோய்த்தடைமருந்து ஏற்றப்படவுள்ள நிலையங்களின், நேரம் பற்றிய விவரம் வருமாறு:-

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலையத்திலும், காலை 10.30 மணிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் சனசமூகநிலையத்திலும், நண்பகல் 12 மணிக்கு ஆவரங்கால் மத்தி பாலர் பாடசாலையிலும் -

அதேபோல், நாளைமறுதினம் புதன்கிழமை காலை9 மணிக்கு ஆவரங்கால் கிழக்கு லிங்கன் சனசமூக நிலையத்திலும், காலை 10.30மணிக்கு ஆவரங்கால் கிழக்கு கலையகம் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30 மணிக்கு புத்தூர் வடக்கு புதுவையூர் சனசமூகநிலையத்திலும், பிற்பகல் 12.30மணிக்கு புத்தூர் வடக்கு மருதடி சனசமூக நிலையத்திலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

# சமாதான முயற்சியின் வேகத்தை குறையாது பாதுகாக்க நடவடிக்கை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.19

சமாதான முயற்சியின் வேகத்தை குறையவிடாது தடுக்க தாம் முயற்சி கொண்டிருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கெப்பிற்றிப்பொலவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் இது தொடர்பாக அங்கு மேலும் கூறியதாவது:-

இனங்களிடையே இழந்த நம்பிக்கையை சமாதானத்தின் மூலமே மீண்டும் பலப்படுத்த முடியும். இதற்கு முன்பிருந்த அரசு போர்நிறுத்த ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்தது. ஆனாலும், அவற்றை முறையே நடைமுறைப்படுத்தமுடியாமற்போய்விட்டது.

தற்போதைய அரசு போர்நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. அதுமட்டுமன்றி, அதனைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொண்டுள்ளது. இதன்மூலம் மக்களுக்கு சமாதானம் தொடர்பான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது - என்றார் பிரதமர். (ஒ-6-5)

# ஜனாதிபதி ஏற்ற அமைச்சுக்களால் கொள்கை ரீதியான மாற்றம் ஏதுமில்லை

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.19

ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள அமைச்சுக்கள் மூலம் எந்தவிதக் கொள்கை ரீதியிலான மாற்றமும் இதுவரை இடம்பெறவில்லை. இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக மக்களைத் தெளிவுபடுத்துவதற்கா அரசு செயற்றிட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது என்றும்-

இந்தச் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் - அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார். சமாதானச் செயற்பாடுகளை மக்களுக்கு விளக்குவதற்கான கருத்தரங்கு சமீபத்தில் களுத்துறை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுள்ளார் என்றும் பொறுப்பேற்ற அமைச்சுக்கள் மூலம் அவர் எதுவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ஒ-6)

## யாழ். போதனா வைத்தியசாலை சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவுக்கு நவீன இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் (HAEMODIALYSIS MACHINE) வழங்கும் வைபவம்

லண்டன் வாழ் இந்துக்களின் அன்பளிப்பாக ரூபா 17,000,00 (ரூபா பதினேழு லட்சம்) பெறுமதியான மேற்படி இயந்திரம் செஞ்சொற் செல்வர் திரு.ஆறு. திருமுருகன் அவர்களின் வேண்டுகோளுக்கு இசைய லண்டன் வாழ் திரு.வே.சிவசுந்தரம் என்ற அன்பர் ஊடாக பெறப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் வழங்கல் வைபவம் யாழ். போதனா வைத்தியசாலை சிறுநீரக சிகிச்சைப் பிரிவில் இன்று (19.01.2004) திங்கட்கிழமை மாலை 4மணிக்கு நிகழும்.

தலைவர் :- வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்
(பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

ஆசியுரை :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

பிரதம விருந்தினர்:- சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

சிறப்பு விருந்தினர்கள்:
1. கலாநிதி க.சிவபாலன்
(பீடாதிபதி, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
2. வைத்திய கலாநிதி த.பேரானந்தராசா
(வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை)
3. வைத்திய கலாநிதி எஸ்.ஜெயரட்ணம்
(சத்திர சிகிச்சை நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை)
4. திரு. க.சிவாஜி (அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)
5. வைத்திய கலாநிதி ச.குகதாசன்
(கண்வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை)

நிறைவுரை: செஞ்சொற்செல்வர் திரு. ஆறு. திருமுருகன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
யாழ்.போதனா வைத்தியசாலை.
இரத்த சுத்திகரிப்புப் பிரிவு
Haemodialysis Division

(27325) (26-13-18)



## மணப் பெண்கள் அலங்கார காட்சிகளும் கைப்பணிப் பொருள்கள் கண்காட்சியும்

"Posh" அழகுக் கலை நிறுவனத்தின் மாணவர்களால் நடத்தப்படும் இந்நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

இடம் : யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
காலம் : 01.02.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00

✲ பார்வையாளர்களில் மூவருக்கு பெறுமதி வாய்ந்த மூன்று பரிசில்கள் வழங்கப்படும்.
எம்மிடம் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெறும்.

சாறி வேலைப்பாடு (Saree Works),
முத்துமாலை வேலைப்பாடு (Costume Jewellery Making)

வகுப்புகள்
எதிர்வரும் 21.01.2004 காலை 9.00 மணிக்கு
314, கோயில் வீதி, நல்லூர்
(சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு அருகில்)
எனும் முகவரியில் ஆரம்பமாகவுள்ளது. முன்னர் பங்குபற்றியவர்களும் இவ்வகுப்பில் பங்குபற்றலாம்.
T.P.:7030, 3409.

**Posh அழகுக்கலை நிறுவனம்.**
J.P.J.ஆனந்தரமணன்
077-6167729.

(C/32848)(34-13-18)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 - 03 - 1937 | 30 - 01 - 2003 |

### அமரர் கந்தையா நடராசா
(பாலாவோடை, காரைநகர்)

எமது குல முதல்வனே ஐயா!
அல்லும் பகலும் ஓய்வின்றி உழைத்து
எம்மை ஆளாக்கி வளர்த்த தெய்வமே!
இப்போது நிரந்தரமாய் ஓய்வு வேண்டிச் சென்றதேனோ?
உங்கள் திருமுகம் காண ஏங்குகின்றோம்.
எத்தனை பிறவி எடுத்தாலும் உங்கள் முகம்
எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது!
உங்கள் வரவுக்காக சொர்க்கவாசல்
என்றுமே திறந்திருக்கும்!

தற்காலிக முகவரி:
169, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
நிரந்தர முகவரி:
பயிரிக்கூடல், காரைநகர்.

உங்கள் நினைவுடன் வாழ்கின்ற:
அன்பு மனைவி,
பிள்ளைகள்.

(27315) (23-13-18)

## பேரின்ப வாழ்வில் 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணக வாழ்வில் | விண்ணக வாழ்வில் |
|---|---|
| 12 - 10 - 1926 | 19 - 01 - 1999 |

### அமரர் சுவாம்பிள்ளை அருளானந்தம் அவர்கள்

ஆண்டவரே என் ஆயன்
எனக்கேதும் குறையில்லை (திருப்பாடல். 23:1)
ஐயா உங்களை
உள்ளத்தால் நேசித்தோம்
உயிருள்ளவரை மறந்திடோம்!

இல.8, மகளிர் கல்லூரி வீதி,
உடுவில்.

இவரின் பிரிவில் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(27323) (23-13-18)

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி செல்லம்மாள் சாம்பசிவ சிவாச்சார்யார்

இலங்கையின் முதலாவது இந்துமத குரு பீடாதிபதி யாழ். நாயன்மார்கட்டு வைத்தியகலாநிதி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின் பிரியதர்மினியும் தஞ்சாவூர் ஜெகதீஸ்வர ஐயர் பிரஹத் குஜாம்பாள் தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வியுமான ஸ்ரீமதி சா.செல்லம்மாள் 17.01.2004 சனிக்கிழமை கொழும்பில் இறைபதம் எய்தினார்.

அன்னார் கௌரி அம்மாளின் அன்புச் சகோதரியும் சண்முகநாதக் குருக்கள் (லண்டன்), தணிகாசலக்குருக்கள்(தென்னாபிரிக்கா), ஜெகதாம்பாள், கனகாம்பிகை, விஜயலஷ்மி, கணேசக்குருக்கள்(அமரர்), சோமஸ்கந்தக்குருக்கள், செந்தில்நாதக்குருக்கள், தேவமனோகரி, ஐயப்பதாஸக் குருக்கள், பங்கஜவல்லி, நித்தியலஷ்மி, பிரகதாம்பாள், ஜெகதீஸ்வரக் குருக்கள், ஸ்ரீசரஸ்வதி, அகிலாண்டேஸ்வரக் குருக்கள் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2004) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு
தொ.பே.இல. 0112-529709, 077 6047397

தகவல்:
மருமகன்
சிவ.நித்தியானந்தக்குருக்கள்
(சங்கானை).

(27326)(13-18)

## கொழும்புத்துறையில் பாலர் பாடசாலை மீண்டும் ஆரம்பம்

கொழும்புத்துறை,ஜன.19

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையப் பாலர் பாடசாலை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

2000ஆம் ஆண்டு இடப்பெயர்வை அடுத்து செயலிழந்திருந்த இந்தப் பாலர் பாடசாலை ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளதாக "ஜெற் லைனேர்ஸ்" சனசமூக நிலைய தலைவர் தெரிவித்துள்ளார். (ஒ-30)

## சிங்கள இணையத்தளம்

கொழும்பு,ஜன.19

சிங்கள மக்களின் அபிலாஷைகளை உலகளாவியரீதியில் வெளிப்படுத்துவதற்காக இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிங்களவர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச நிலையம் என்ற அமைப்பு இந்த இணையத்தளத்தை ஆரம்பித்துள்ளது.

தமிழ்ப் பயங்கரவாதத்திற்கு இந்த இணையத்தளம் ஊடாகத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று மேற்படி அமைப்பு கூறியுள்ளது.

## கேணல் கிட்டு நினைவாக சிரமதானம்

கேணல் கிட்டுவின் 11ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு மட்டுவில் வேரக்கேணி கந்தசாமி கோவில் பரிபாலன சபையினர் ஆலய சுற்றாடலையும், வேரக்கேணி வீதியினையும் சிரமதானம்மூலம் துப்புரவு செய்துள்ளனர். (எ-117)

## கூட்டம்

சண்டிலிப்பாய் (வலி.தென் மேற்கு) பிரிவு கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும். இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத்தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா, மாவட்ட கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.செல்வரட்ணம், சண்டிலிப்பாய் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ்.சுதாகர் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். (எ-135)

## ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்பு

அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு ஒரு லட்சம் பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

லண்டனில் வசிக்கும் பழைய மாணவர் ஒருவர் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக இவற்றை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.


### ஆங்கிலக் கல்லூரி
அச்சுவேலி

ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான
பொதுஅறிவு, நுண்ணறிவு
பிரிவுII
ஆரம்பம்: 20-01-2004
காலை 9.00
Lect. By: S.உதயம்

(27311)



## மங்களகரமான திறப்புவிழா அழைப்பும் இடம்மாற்ற அறிவிப்பும்

Serendib Air Lines



அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சுபானு வருடம் தைத்திங்கள் 5ஆம் நாள் இன்று (19.01.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் வரும் சுபமுகூர்த்த நல்வேளையில்,

உங்கள் தேவையே எங்கள் சேவையாக வழங்குகின்ற

**சேரண்டிப் ஏயர் லைன்ஸ் SERENDIB AIR LINES**

என்ற ஸ்தாபனம் இல. 86, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மங்களகரமாக ஆரம்பிக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். ஆகவே அத்தருணம் எமது முகவர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள், வாடிக்கையாளர்கள் அனைவரும் சமுகந்தந்து விழாவைச் சிறப்பித்து எமக்கு ஆதரவு நல்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது ஸ்தாபனம் இதுவரை நாளும் இல. 13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது

இனிமேல் விமானப் பயண ஒழுங்குகளுக்கு எமது புதிய இடமான இல. 86, பருத்தித்துறை வீதி முகவரிக்கே விஜயஞ்செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
உங்கள் சௌகரியமான சுகமான விமானப் பயணங்களுக்கு உடனடியாக நாடவேண்டிய இடம் சேரண்டிப் ஸ்தாபனமே!

தலைமை அலுவலகம் : **SERENDIB AIR LINES** 86 Point Pedro Road, Jaffna.
ஆரியகுளம் சந்திக்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இடையில்
☎ 021 222 6242 FAX :222 5600

(C/32850)(23-13-18)



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலைவலி, தலைசுற்றல் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூல வியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி:
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 222 2459

## காணவில்லை

இல.226, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் 3வயது நிரம்பிய Dark Brown நிறமுடைய பொமோயன் நாய்க்குட்டியை 15.01.2004 வியாழன் முதல் காணவில்லை. கண்டவர்கள் மேல் உள்ள முவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (சி-32855)

# திட்டமிட்டபடி உண்ணாவிரதம்

கொழும்பு,ஜன.19

சுகாதாரச் சேவை ஊழியர்கள் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினை தொடர்பாக அரசுக்கு விதித்த காலக்கெடு நாளையுடன் முடிவடைகின்றது. இக்காலக் கெடுவுக்குள் தமது கோரிக்கைக்கு நியாயமான தீர்வு கிடைக்காவிட்டால் திட்டமிட்டபடி சாகும்வரை உண்ணாவிரதப் போராடம் ஆரம்பிக்கப்படும் என்கிறார் சுகாதார சேவை ஊழியர்களின் கூட்டுத் தொழிற்சங்க அமைப்பாளரான சமன் ரத்னபிரிய.

எனினும், அமைச்சரவையில் நியமிக்கப்பட்ட சம்பள முரண்பாடு மீளாய்வுக் குழுவினருடன் நாளை இறுதிப் பேச்சு நடத்தவுள்ளோம். இப் பேச்சின போது எமது கோரிக்கைக்கு நியாயமான முடிவு கிடைக்காவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதப் போராடடத்தை ஆரம்பிப்போம் - என்று அவர் தெரிவித்தார். (ஐ-9)

## 45 ஆம் நாள் நினைவலைகள்



| மண்ணுலகம் | விண்ணுலகம் |
|---|---|
| 30 | 06 |
| 04 | 12 |
| 1962 | 2003 |

### செல்வன் கந்தையா இராசமோகன் (ராசு)
### (லண்டன்)

பாசத்தின் வித்தாய் பண்பின் உறைவிடமாய்
பார் போற்றும் உத்தமனாய் வாழ்ந்த - எம்
உயிர் விளக்கே - பல காலம் எமைக்
காத்தாய் - பாரினில் நாம் பரிதவிக்க
காலனவன் கவர்ந்து விட்டான்
45 நாள்கள் உருண்டோடினாலும்
எம் கண்ணீர் வற்றாது.
காலமெல்லாம் உம் நினைவால்
வாழ்ந்திடுவோம் இப்பாரினிலே...

தகவல்:
இ.கந்தையா
நூலக வீதி,
கைதடி தெற்கு, கைதடி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(27324)(32-17-18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 20 |
| 07 | 12 |
| 1977 | 2003 |

எமது குடும்பத் தலைவி

### திருமதி தர்மலிங்கம் ஜெயக்குமாரி
### (குமாரி)

இல்லத்தின் ஒளிவிளக்காய் இருப்பாய் என்றிருந்தோம்
எல்லோரையும் ஏமாற்றிவிட்டு இறையடி சேர்ந்தீரோ?
ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19.01.2004) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு, நண்பகல் நிகழ்கின்ற மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்துமாரியம்மன் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

- குடும்பத்தினர்.

(27332) (32-17-18)

## ஓராண்டு நிறைவினில் ஓயாத நினைவினில்...



| 'பூ'வாய் | 'பதி'க்காய் |
|---|---|
| 23 | 16 |
| 01 | 01 |
| 1943 | 2003 |

### அமரர் பொன்னு பூபதி

ஓடியது ஓராண்டம்மா....!
வாடிய பூ பதித்தாயே
வாடாத பண் பூக்களை
எம்முள் - பதித்தாயே!
அழகின் ஒளியே, அன்பு மொழியே
பழகும் பண்பில் பாச வழியே
உலகின் மொழியே
உய்வித்த விழியே !
மொழியால் சொல்ல வழியில்லையம்மா!
எங்கள் - விழிகள் இன்னும்
விண்ணப்பிக்கின்றன;
பழிகள் - அற்ற உன்
பண்பு முகம் பார்க்க...

உன் நிறைவின்
உறைவால் நின்றுருகும்;
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ந.பொன்னு,
கற்பகப் பிள்ளையார் ஒழுங்கை,
உரும்பிராய். (27322)(32-17-18)

## கண்ணீர் அஞ்சலி



எனது பெரியப்பாவான
**செல்லப்பா துரைராசா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இறுதிக் கிரியைகள் இன்று (19.01.2004) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவில் கிழக்கு நெட்டிலிப்பாயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

ஜேர்மனி.

ஜெயம்
(பெறாமகள்).

(சி-32857)(32-18-17)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
சேவியர் சுறாஞ்சிந் அவர்களின்
அன்புத் தந்தை
**P.F. சேவியர்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அடைக்கல அன்னை ஆலய,
நண்பர்கள்.
யாழ்ப்பாணம்.

(27339)(32-18-17)


**ராஜா** யாழ்ப்பாணம்
பிரசாந் நடித்த
காட்சி நேரம்: (ரீல்ஸ்)
10.30, 2.30, 6.30,9.30 (பு.நே.)
(சி-32369) (32)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
அஜித், கார்த்திக், ரோஜா நடித்த
உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
TOMB PAIDER-II
(C-32370) (32)

**லிபேட்டி** அச்சுவேலி
பிரசாந் நடித்த
"வின்னர்" (ரீல்ஸ்)
தினசரி : 3.00, 7.30.
(C-32371) (32)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P இன் பொங்கல் வெளியீடு
விருமாண்டி (சண்டியர்) (ரீல்ஸ்)

ஆசனப்பதிவுகளுக்கு ரட்ணம்ஸ் பார்மா
யாழ்ப்பாணம்
T.P.: 021-222 2917
நாகம்ஸ் பாட்டா-சுன்னாகம்
T.P: 060 221 2779
வீடியோ ஆனந் - மானிப்பாய்
T.P.: - 021-2222889
நாகம்ஸ் திரை அரங்கம்,
சுன்னாகம். (சி-32739)(31)

**லஷ்சுமி சினிமா** இணுவில்
பாலா. மணிவண்ணன். விவேக் நடித்த
காதல் கிசு கிசு (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(27262)


# மரண அறிவித்தல்

## பிலிப் பிரான்சிஸ் சேவியர்

**(P.F.Xavier - முன்னாள் யாழ். மாநகர உதவி மேயர், யாழ். கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழக ஸ்தாபகர்)**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த P.F. சேவியர் அவர்கள் 16.01.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாவிலு பிலிப் - காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்பு மகனும் றீற்றா ஜெஸ்மினின் அன்புக் கணவரும் ஜிற்றி (கனடா), றூவனி (லண்டன்), நிறாஞ்சிற் (கனடா), சுறாஞ்சிற் (யாழ். மாநகரசபை, உத்தியோகத்தர்), றொஷானி, டிலானி (மக்கள் வங்கி), றிஷானி ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலா (நல்லாயன் அ.த.ம.வி. ஆசிரியை கொழும்பு), கிறிஷான் கணகசபை (பொறியியலாளர் லண்டன்), கலிஸ்டெலா (கனடா), ஜெகான் (பொறியியலாளர் senok) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ருக்சன், றிஷ்னி, அனன்ஜா, சத்தியவாணி, கவிலன், கிளறன்ஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் கிறிஸ்தோஸ்ரதரின் அன்புச் சகோதரனும் Dr.J.T. சேவியர், காலஞ்சென்ற திருமதி பிரான்சிஸ், திருமதி M.I. ராஜேந்திரா, காலஞ்சென்ற Dr.G.A. மற்றும் பெனாட், பெனடிட் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (19.01.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.3.00மணி அளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.35ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம். (27341)(32-18-17)

தகவல்:
மனைவி, மக்கள்.

## தியாகராச குருக்கள் இரட்ண சபாபதி ஐயா

**(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்)**

அச்சுவேலி சந்நிதி வீதி, கொட்டியவளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தியாகராசக் குருக்கள் இரட்ணசபாபதி ஐயா (இராமலிங்கம்) அவர்கள் நேற்று (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் இரட்ணேஸ்வரன் (கனடா), வசந்தகுமாரி (கனடா), மகேஸ்வரன (கனடா), சர்வேஸ்வரன் (இ.மி.சபை யாழ்ப்பாணம்), இரத்தினகுமார், கஜரூபவரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பகாந்தி அம்மா, காலஞ்சென்ற பரமேஸ்வரி அம்மா மற்றும் புஸ்பராணி, வைத்திலிங்கக் குருக்கள ஆகியோரின் சகோதரரும் வசந்தி (கனடா), ஆனந்தராசா (கனடா), லோகபாலினி (கனடா), விஸ்னுகாந்தி (சுகாதார பணிமனை கோப்பாய்), மாணிககவாசகர்(பொறுப்பதிகாரி வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம், அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுவர்ணா, மதுரா, சுஜீவன், பவித்திரா, துளசி, சாருஜன் (கனடா), அமலன், மனோஜா, வித்தியா, கோபிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2004) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 3மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி பத்தைமேனி தத்தான்குள இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்நிதி வீதி,
அச்சுவேலி. (சி-32856)(18-17-32)

தகவல்:
இ.சர்வேஸ்வரன் (மகன்),

## இரத்தினசிங்கம் தனேஸ்வரன்

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் தனேஸ்வரன் கனடாவில் சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் இரத்தினசிங்கம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும சீவரத்தினம், சாந்தினிதேவி, கணேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனேஸ்வரி (காரைநகர் ஊரி A.M.T.M பாடசாலை), தவராஜி (யா/கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயம்), தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் வதனரூபி, திலீபன், சர்மிளா ஆகியோரின் மாமனாரும் ஜயதீபனின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு. (27337) (32-18-17)

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்லத்துரை அரியரத்தினம்

**(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்)**

கண்டி வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை வீதி, மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது அலென் அவென்யு தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அரியரத்தினம (Retired A.G.A) அவர்கள் நேற்று (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மகேஸ்வரி (ரஞ்சி) அவர்களின் அன்புக் கணவரும் நிர்மலன் (R.D.O - A.G.A.'S office பருத்தித்துறை), மைதிலி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுணாவதி, மோகன் (Manager-Dialog G.S.M) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி பாக்கியரட்ணம் (ராணி), தில்லைநாதனின் அன்பு அண்ணனும் Dr. தில்லைநாதன் (கனடா) அவர்களின் அன்பு மைத்துனரும் ராஜினி செல்லத்துரை (கொழும்பு), வசந்தினி சிவதாசன் (U.k), சிறீதரன் (Barrister-Canada) அவர்களின் பாசமிகு தாய்மாமனும் ஜொஷீந்தர், நிஷாந், சுஜனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.01.2004) திங்கட்கிழமை அஞ்சலிக்காக Jayaratna Florists Hospital Rd., Kalubowila இல் வைக்கப்பட்டு மாலை 5.00 மணியளவில் Anderson Rd., Nedimala மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*T.P.: 2736818* (சி-32854) (32-18-17)

தகவல்:
குடும்பத்தினர்.

## பாலரட்ணம் கணேசானந்தன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலரட்ணம் கணேசானந்தன் நேற்று (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை இல.37/4, ரெறன்ஸ் அவென்யூ கல்கிசையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பாலரட்ணத்தின் புதல்வனும் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பியப்பாவின் மருமகனும் ரோகினியின் அன்புக் கணவரும் கிறிஷாந்தாவின் அன்புத் தந்தையும் சாந்தியின் மாமனாரும் றதிதேவி, சிவாஜினி, நந்தகுமாரின் சகோதரனும் ராஜினி, சுவேந்தினி, செல்வினின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2004) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு ஆரம்பமாகி பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 2 மணிக்கு இல.37/4, ரெறன்ஸ் அவன்யூவிலிருந்து கல்கிசை பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

*NO. 37/4, Terrance Avenue,*
*Mount lavania,*
*T.P.: 2731632.* (27329)(32-18-17)

தகவல்:
மனைவி, மகன்,
மருமகள்.

# நாடாளுமன்றத்துக்கு...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)
வகிக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு தேர்தலில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட சந்திரிகா பண்டாரநாயக்க 1994இல் முதலாவது தடவையாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

1999ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டு பிரதம நீதியரசர் முன் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். தொடர்ந்து 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் இரகசியமாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

அரசமைப்பின் 31(2), 32(1) ஆகிய ஷரத்துக்களின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் இரண்டு தடவைகள் மட்டுமே அப்பதவியை வகிக்க முடியும். தமது பதவிப்பிரமாணத்தை பிரதம நீதியரசர் அல்லது உயர் நீதிமன்ற நீதிபதிகளுள் யாராவது ஒருவர் முன்செய்துகொள்ள வேண்டும்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன் அப்பதவியில் வெற்றிடம் ஏற்பட்டால் இந்த இடைக்காலப் பகுதிக்கு நாடாளுமன்றம் தகுதியான ஒருவரை ஜனாதிபதியாக தெரிவுசெய்யமுடியும் என அரசமைப்பின் 40 (ர) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுறும். எஞ்சியகாலப்பகுதிக்கு மட்டுமே ஜனாதிபதியாக செயலாற்றும் உரித்துடையவராவார்.

அரசமைப்புக்கு மாறான வகையில் மூன்றாவது முறையாக ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட சந்திரிகாகுமா ரதுங்க தொடர்ந்தும் பதவிவகிக்க முடியுமா, இல்லையா என்பதை சபாநாயகர் தீர்மானிக்க வேண்டும். சபாநாயகரின் தீர்ப்பை எவரும் ஆட்சேபிக்க முடியாது. அதன்படி நாடாளுமன்றம் தகுதியான ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும். அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர் பிரதம நீதியரசரின் முன்தான் பதவிப்பிரமாணம் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உயர்நீதிமன்ற நீதிபதிகளுள் ஒருவரின் முன்னிலையிலும் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொள்ள முடியும் எனவும் அரசதரப்பில் கூறப்பட்டுள்ளது.

(ஐ)

---

## நடிகர்மணிவண்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)
(Pvt) Ltd) நிறுவனத்தின் ஏற்பாட்டில் அவர் இங்கு வருகை தருகின்றார். முன்னதாக நாளை செவ்வாய்க்கிழமை அவர் வன்னிப் பகுதிக்கு செல்கின்றார். அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் கலைஞர்களையும். சினிமா கலைத்துறை சார்ந்தவர்களையும் மணிவண்ணன் சந்திப்பார்.

ஈழத்தமிழர்கள் தொடர்பான சரியான பார்வையை தென்னிந்திய கலைஞர்கள் மத்தியில் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டே கலைஞர் மணிவண்ணனின் யாழ்ப்பாண விஜயத்துக்கு ஏற்பாடுசெய்ய தாம் முன்வந்ததாக ரில்கோ ஹொலிடேய்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி. திலகராஜா தெரிவித்தார்.

(ஐ)

**Lingam master - swiss**

சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
**Deutsch** - பெரியவர்களுக்கு
**Deutsch** - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
**4665 Oftringen - swiss.** (26642)(36)

## நாடாளுமன்ற...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)
ராக இருந்து வருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மத மாற்றத் தடுப்புச்சட்டத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாக ஐ.தே.முன்னணி அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைத்தால் மகாசங்கத்தினரதும் மற்றும் பௌத்த அமைப்புகளதும் எதிர்ப்பை பொ.ஐ.முன்னணி எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இதனால் மாகாண சபைத் தேர்தல்களை முதலில் நடத்தி கூட்டு முன்னணிக்கு மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்கைப் பரீட்சித்துப் பார்த்த பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தலாமென்று சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலரும் பின்வரிசை உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கு ஆலோசனை தெரிவித்துள்ளனர் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

(ஐ-9)

---

## வடக்கு...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)
பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளுடன் தயாரிக்கப்படவுள்ளது. இந்தப் பணிக்கு நோர்வே அரசு உதவி வழங்கவிருக்கிறது என்று புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்குக்கான பொது அபிவிருத்தித் திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகளின் திட்டமிடல் அபிவிருத்திச் செயலகம் தயாரிக்கவிருக்கிறது. இத்திட்டம் சகல துறைகளையும் உள்ளடக்கியதாக அமையும்.

வெளிநாட்டிலிருந்து துறைசார்ந்த பொருளாதார நிபுணர்களைப் பணிக்கு அமர்த்தி அவர்கள் மூலம் திட்டம் தயாரிக்கப்படும். இந்த நிபுணர்களை நியமிப்பதற்கும் அவர்களின் பணிகளுக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கும் நோர்வே அரசு உதவி வழங்கும்.

(ஐ-9)

## புலிகளின் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருமைப்பாடு ஆகியவற்றுடன் விடுதலைப் புலிகளின் யோசனைகளை இணங்கச் செய்யக்கூடியதாக பல்வேறு விடயங்கள், சட்ட வழிவகைகள் குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டிருக்கிறது.

தேசிய பொதுக்கருத்துக்களின் அடிப்படையில் சகல சமூகங்களினதும், சம்பந்தப்பட்ட குழுக்களினதும் நீதியான அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-9)

## ஐக்கிய மக்கள்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)
ரதுங்கவும், செயலாளராக ரில்வின் சில்வாவும் (ஜே.வி.பி.), தேசிய அமைப்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் நியமிக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வைபவத்துக்காக ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க லண்டனிலிருந்து நாளை இலங்கை வரவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.ஒப்பந்த வைபவத்தை ஏற்பாடு செய்யும் பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாளைய உடன்படிக்கையில் நாடாளுமன்றத் தேர்தல்கள உடனடியாக நடத்தப்படவேண்டும் என்று ஜே.வி.பி வலியுறுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

**திறப்பு விழா அழைப்பு**

தகவல் தொழில்நுட்பக் கல்லூரி
College of Information Technology (CIT)
சிவன் வீதி, ஆவரங்கால், புத்தூர்
T.P.: 0777 - 589703
e-mail - avarangalcit@Yahoo.com
காலம்:~ இன்று (19.01.2004) திங்கட்கிழமை மாலை 3 மணி



தலைவர்:~ T.மோகனராஜ் B.A.(Hon)
பிரதமவிருந்தினர் :~ B.யோகராஜா (பௌதிக விஞ்ஞானத்துறை, வவுனியா வளாகம்)
சிறப்பு விருந்தினர்கள் :~
V.தனேஸ்வரன் (கணனித்துறை விரிவுரையாளர், வவுனியா வளாகம்)
S.ஜெயராஜன் (கணனித்துறை விரிவுரையாளர், வவுனியா வளாகம்)
V.ஆறுமுகம் (அதிபர், யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்)
V.பாலசுப்பிரமணியம் (அதிபர், யா/ நடராஜ இராமலிங்க வித்தியாலயம், ஆவரங்கால்)
கௌரவவிருந்தினர் :~ V. நடராஜக்குருக்கள் (சிவன் கோவில்,. ஆவரங்கால்)

★ விசேட கணனிக் கருத்தரங்கு இன்று மாலை 5.30 மணிக்கு CIT விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். (விசேடமாக பெற்றோர்களும் எதிர்பார்க்கப்படுகின்றனர்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்கள்,
இ.சிவகணேசன்,
ந.சுரேஸ்குமார்.
(27225)(31-17-18-36)

**BARATHY - சித்தன்கேணி**

**A/L 2005, 2006**

பொருளியல்: S.வரதராஜன் B.A.(Hons)
ஆரம்பம் : 22.01.2004 வியாழன்
A/L 2005 - 3.30 p.m.(ப.நே.)
A/L 2006 - 5.00 p.m.(ப.நே.)
(27299) (22-11-16)

**விக்கி (B.Com.)**

பிரத்தியேக வகுப்புகள் (வீட்டில் வந்தும் கற்பிக்கப்படும்)
★ A/L 2006 வர்த்தக வகுப்புகள்
★ O/L வர்த்தகமும், நிதியும்
★ 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில
தொடர்புகளுக்கு:
ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு.
T.P.: 077 6218306
(26643)

**கணனி உலகிற்கு ஒரு புதிய பாதை...**

**eTouch COMPUTER SYSTEM**

தொடக்க நாள் நிகழ்விற்கான அழைப்பு
காலம் : இன்று (19.01.2004) திங்கட்கிழமை மாலை 4.00 மணி
இடம் eTouch COMPUTER SYSTEM உடுவில் வீதி, மருதனார்மடம்.

பிரதம விருந்தினர்
திரு.S.திருவாகரன் - பிரதேசச் செயலாளர், உடுவில்

சிறப்பு விருந்தினர்கள்
திருமதி கோகிலா மகேந்திரன் - உதவிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வலயம்
திரு. A.R. குலேந்திரன்- முகாமையாளர், கொமர்ஷல் வங்கி, சுன்னாகம்.
திரு.சேனகவீரசிங்க - பொறுப்பதிகாரி (Officer - in - Charge), பொலிஸ் நிலையம், சுன்னாகம்

கௌரவ விருந்தினர்கள்
திரு.V.பத்மநாதன் - பயிற்சி உத்தியோகத்தர், N.A.I.T.A
திரு.P. சுந்தரலிங்கம் - அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
திரு.S.புண்ணியசீலன் - அதிபர், யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் - அதிபர், இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்
திரு.M.நாகேந்திரசீலன் - அதிபர், மல்லாகம் மத்திய கல்லூரி
திரு. K. சிவாஜி - அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்
திரு. துரைஎங்கரசு - அதிபர், இணுவில் மத்திய கல்லூரி
திரு.S.R.ஜெசுபாலன் J.P. - ஓய்வுபெற்ற கிராமசேவையாளர், உடுவில்
திரு.S.பாலசுப்பிரமணியம் - கிராமசேவையாளர், உடுவில் தெற்கிழக்கு.

கணனி ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் -
நிறுவனத்தினர்.
(27330)(31-36-17-18)

# மரண அறிவித்தல்கள்

## வேலன் கந்தையா

யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் காம்றோட், ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கந்தையா அவர்கள் நேற்று (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - சின்னாச்சி ஆகியோரின் மூத்தபுதல்வனும் காலஞ்சென்ற பூபதியின் அன்புக் கணவரும் ஜீவா(பிரான்ஸ்), ஜீரா(பிரான்ஸ்), ஜீலா(பிரான்ஸ்), ஜீதா(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னையா, மகேஸ்வரி, சின்னத்தம்பி (J.P.), கனகம்மா, செல்லம்மா, பொன்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜி(பிரான்ஸ்), மதிவதனி (பிரான்ஸ்), பத்மராஜா(பிரான்ஸ்), கனகராசா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விவரம் பின்னர் தெரிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14, லெப்பை லேன்,
சோனக தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
வே.சின்னத்தம்பி
(சமாதான நீதவான்- சகோதரன்).
(27338) (36-17-18)

## கந்தையா வரதலிங்கம்

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூரை வசிப்பிடமாகவும்கொண்ட கந்தையா வரதலிங்கம் நேற்று(18.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் இராசலட்சுமி, கவிஞர் புதுவை இரத்தினதுரை, சரோஜினிதேவி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் கா.செ.பத்மநாதன், ஸ்ரீரஞ்சினி, குமாரலிங்கம், வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுரேசன், சுரேந்திரன், சுதாகரன், சுதாஜினி, சுபாஜினி, சசிகலா, மாலிகா, சோபிதன், ஜீவிதன், தர்மினி, நிவேதன், கமலாம்பாள், தயாளினி, புஸ்பலதா, சிவதாஸ், பார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பேரனும ரஜனி, கஜனி, வர்சிகா, யாதவன், ரம்மியன், ஆகியோரின் அன்புப் பூட்டனும் அமரர் சின்னத்தம்பி - தங்கம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் சின்னராசா, நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று(19.01.2004) திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக புத்தூர் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர். (சி-32858)(36-17-18)

தகவல்:
கவிஞர் புதுவை இரத்தினதுரை (மகன்),
கா.செ.பத்மநாதன்(ஜே.பி. - மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.